*கவனிக்க.- 2016.11.04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1993 - 2016 නොවැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2016.11.11**

*1993 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *2038* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2050* |


**கவனிக்க.-** (i) *சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, யூலை மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *மஹிபால ஹேரத் ஜன சஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(iii) *சரவணபவன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, மார்கழி மாதம் 14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஒற்றோபர் 21.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | பியகம | சியனே கோரளை மேற்குப் பிரிவில் மல்வான - யட்டிஹேன பகுதி முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா |

11-475

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

(சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு)

### பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

உள்வாரி மற்றும் வெளிவாரியான விண்ணப்பதாரிகள் :

1. **பதவி.- பேராசிரியர் (பதவி 1)** :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 55 வயதுக்கு அதிகரிக்காமலிருத்தல் வேண்டும். (தற்போது இந்நிறுவனத்தில் பணி புரிபவர்களுக்கு உச்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.) ;

(ii) இணைத்துக்கொள்வதற்கான தகைமை :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/ ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட சமூகப் பணி/சமூக விஞ்ஞானப் பாடங்களில் முதற்தர சித்தி அல்லது 2 ஆம் தர (உயர்) சித்தியுடன் கூடிய பட்டம் பெற்றிருத்தல் ;

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சமூகப் பணி/ சமூக விஞ்ஞானப் பாடங்களில் தரச்சித்தி இல்லாத பட்டத்துடன் சமூகப்பணி, சமூக நலன்புரி, சமூகக் கொள்கை, உளவளத்துணை, சமூக/ சமுதாய அபிவிருத்தி ஆகிய பாடங்களில் அல்லது அத்துறைகளோடு தொடர்புபட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட/ குறைந்தது ஒரு வருட காலத்திற்கு குறையாத முதுமாணி பட்டம் ;

அத்துடன்

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சமூகப் பணி அல்லது சமூக விஞ்ஞானப் பாடங்களில் கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல். (சமூகப்பணி கலாநிதிப் பட்டத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும்) ;

அத்துடன்

(இ) குறித்த கலாநிதி பட்டம் பெற்றதன் பின்னர் பல்கலைக்கழக மட்டத்தில் விரிவுரை மேற்கொண்டிருத்தல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் குறைந்தது 10 வருட அனுபவத்துடன் கல்வி நிருவாகத்தில் போதிய அனுபவம் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஈ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 10 வருட சேவைக்கால அனுபவத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் சமூகப் பணி/சமூக விஞ்ஞானப் பாடங்களில் கலாநிதி பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;

மற்றும்

(உ) ஆங்கில மொழியில் சிறந்த முறையில் பணியாற்றும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

(iii) நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை :

| | |
|---|---|
| கற்பித்தலுக்கான பங்களிப்பும் கல்வி அபிவிருத்தியும் | 20 புள்ளிகள் |
| ஆய்வு மற்றும் புத்தாக்க செயற்பாடுகள் | 45 புள்ளிகள் |
| அறிவு விசாலமாக்குதலும் தேசிய அபிவிருத்தியும் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 20 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(iv) சம்பள அளவுத்திட்டம்.- HM2-3-2016 - ரூபா 98,215 - 12 x 2,700 - ரூபா 1,30,615 (மாதாந்தம்) சம்பள அளவுத் திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன்படி சம்பளம் வழங்கப்படும்.
HM2-3-2006 ரூபா 47,245 - 12 x 1,310 - 62,965 ரூபா (மாதாந்தம்)

2. **பதவி.- மேலதிக பணிப்பாளர் நாயகம் (கல்வி நடவடிக்கைகள்)- (பதவி 1)** :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 25 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சமூக விஞ்ஞானப் பாடங்களில் கலைமாணிப் பட்டத்துடன் சமூகப் பணியில் (Social Work) பட்டப்பின் படிப்பினைப் பெற்றிருத்தல்.

(iii) அனுபவம்.- அரச அல்லது அரசாங்க நிறுவனம் ஒன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 15 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல். (இச்சேவைக் காலத்தில், ஆகக்குறைந்தது 3 வருடங்கள் சமூகப்பணியில் (Social Work) பட்டப்பின் படிப்பினைப் பெற்ற பின்னராக இருத்தல் வேண்டும்.

(iv) மேலதிக தொழில்வாண்மை அனுபவம்.- சமூக சேவை/ சமூக நலன்புரி/ சமூக அபிவிருத்தித் துறையில் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மற்றும் சமூகப்பணி தொழில்வாண்மையான நிறுவனம் ஒன்றில் (Professional Body) அங்கத்துவம் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு :
தகைமை.- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 3 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல்.

(v) நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை :

| | |
|---|---|
| குறித்த நிருவாக அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக தொழில் வாண்மை அனுபவம் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(vi) சம்பள அளவுத்திட்டம்.- HM2-1-2016 - ரூபா 93,020 - 12 x 2,700 - ரூபா 1,25,420 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன்படி சம்பளம் வழங்கப்படும்.
HM2-1-2006 - ரூபா 44,030 - 12 x 1,310 - ரூபா 59,750 (மாதாந்தம்)

3. **பதவி.- சிரேஷ்ட விரிவுரையாளர் (பதவிகள் 4) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) கல்வித் தகைமை.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞானப் பாடங்களில் கலைமாணிப் பட்டத்துடன் சமூகப் பணியில் (Social Work) கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல்.

(ஆ) அனுபவம்.- அரச அல்லது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் 10 வருடத்திலும் குறையாத வகையில் சமூகப்பணி கற்றல் மற்றும் கற்பித்தல் துறைகளில் அனுபவமிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு :

(அ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் விரிவுரையாளர் I ஆம் தரத்தில் விரிவுரையாளர் பதவியில் குறைந்தது 5 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.

அல்லது

(ஆ) சமூகப் பணியில் (Social Work) கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல் ; மற்றும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் விரிவுரையாளர் I ஆம் தரப் பதவியில் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை :

| | |
|---|---|
| குறித்த துறையில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக தொழில் வாண்மை அனுபவம் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(iv) சம்பள அளவுத்திட்டம்.- AR-2-2016 - ரூபா 71,585 - 10 x 1,910 - ரூபா 90,685 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன்படி சம்பளம் வழங்கப்படும்.
AR - 2-2006A - ரூபா 34,550 - 10 x 925 - 43,800 ரூபா (மாதம்)

*4. **பதவி**.- **சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர் (பதவிகள் 3)** :*

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் கலைமாணிப் பட்டத்தினையும் சமூக விஞ்ஞானப் பாடத்தில் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றிருத்தல்.

அத்துடன்

அரச அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 10 வருடத்திற்கு குறையாத சமூகப் பணி பயிற்சிப் பிரிவுகளில் அனுபவமிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் கலைமாணிப் பட்டத்தினையும் சமூக விஞ்ஞானப் பாடங்களில் பட்டப்பின் படிப்பினையும் பெற்றிருத்தல்.

அத்துடன்

(iii) அனுபவம்.- அரச அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் 15 வருடத்திற்கு குறையாத சமூகப் பணி பயிற்சிப் பிரிவுகளில் அனுபவம் இருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு தகைமை.-

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் பயிற்சி உத்தியோகத்தர் I ஆம் தரப் பதவியில் குறைந்தது 5 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.

அல்லது

சமூகப் பணியில் (Social Work) கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல் ; மற்றும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் விரிவுரையாளர் I ஆம் தரப் பதவியில் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iv) நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை :

| | |
|---|---|
| குறித்த நிருவாக அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக தொழில் வாண்மை அனுபவம் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(v) சம்பள அளவுத்திட்டம்.- AR-2-2016 - ரூபா 71,585 - 10 x 1,910 - ரூபா 90,685 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன்படி சம்பளம் வழங்கப்படும்.
AR - 2-2006A - ரூபா 34,550 - 10 x 925 - ரூபா 43,800 (மாதம்)

*5. **பதவி**.- **சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் (பதவிகள் 3)** :*

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் கலைமாணிப் பட்டத்தினையும் சமூக விஞ்ஞான பாடத்தில் கலாநிதி பட்டத்தினையும் பெற்றிருத்தல்.

அத்துடன்

அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 10 வருடத்திலும் குறையாத வகையில் சமூகப்பணி ஆய்வுத் துறையில் அனுபவமிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் சமூக விஞ்ஞானப் பாடங்களில் கலைமாணிப் பட்டத்துடன் சமூக விஞ்ஞானத்தில் முதுமாணி பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

அனுபவம்.- அரச அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 15 வருடத்திலும் குறையாத வகையில் சமூகப்பணி ஆய்வுத் துறையில் அனுபவம் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு தகைமை.-

(அ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் ஆய்வு உத்தியோகத்தர் I ஆம் தரப் பதவியில் குறைந்தது 5 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.

அல்லது

(ஆ) சமூகப் பணியில் (Social Work) கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல் ; மற்றும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் ஆய்வு உத்தியோகத்தர் I ஆம் தரப் பதவியில் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை :

| | |
|---|---|
| குறித்த நிருவாக அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக தொழில் வாண்மை அனுபவம் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(iv) சம்பள அளவுத்திட்டம்.- AR-2-2016 - ரூபா 71,585 - 10 x 1,910 - ரூபா 90,685 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன்படி சம்பளம் வழங்கப்படும்.
AR - 2-2006A - ரூபா 34,550 - 10 x 925 - ரூபா 43,800 (மாதம்)

6. **பதவி.- ஆய்வு உத்தியோகத்தர் II *(பதவி 1)*** :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனமொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பின் (உயர்ந்த தரம்) சித்தியுடன் ஆய்வுக் கட்டுரையுடனான பட்டம் ;

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சமூக விஞ்ஞானங்களில் முதலாம் பட்டத்துடன் முதுமாணிப் பட்டம் ;

அல்லது

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டத்துடன் அரசாங்க அல்லது நியதிச் சபைகளில் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ஆய்வு உதவியாளராக ஆய்வு நடவடிக்கைகளில் 3 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை :

| | |
|---|---|
| குறித்த துறையில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக தொழில் வாண்மை அனுபவம் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(iv) சம்பள அளவுத்திட்டம்.- AR-1-2016 - ரூபா 51,285 - 5 x 1,135 - 5 x 1,335 - 15 x 1,590 - ரூபா 87,485 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன்படி சம்பளம் வழங்கப்படும்.
AR - 1-2006A - ரூபா 24,725 - 5 x 550 - 5 x 645 - 15 x 770 - ரூபா 42,250 (மாதம்)

7. **பதவி.- ஆங்கில போதனாசிரியர் III *(பதவி 1)*** :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் ஆங்கிலப் பாடத்தை உள்ளடக்கியதாக பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றினால் பெறப்பட்ட ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியம் மற்றும் ஆங்கில மொழியைக் கற்பிக்கும் முறை உள்ளடங்கிய பட்டம்.

அத்துடன்

(இ) ஆங்கில மொழியைக் கற்பித்தல் தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஈ) ஆங்கில மொழியைக் கற்பித்தல் தொடர்பான அரச பாடசாலை ஒன்றில் அல்லது ஏனைய அரச உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

(iv) நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை :

| | |
|---|---|
| பதவியுடன் தொடர்பான விடய அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக தொழில் வாண்மை அனுபவம் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(v) சம்பள அளவுத்திட்டம்.- MA-4-2016 - ரூபா 37,970 - 10 X 755 - 15 X 930 - 5 X 1,135 - ரூபா 65,145 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன்படி சம்பளம் வழங்கப்படும்.
MA - 4-2006A - ரூபா 18,230 - 10 X 365 - 15 X 450 - 5 X 550 - 31,380 ரூபா (மாதம்)

**8. பதவி.- நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (நிலையப் பொறுப்பாளர்) III - (பதவி 1) (கிளிநொச்சி நிலையத்திற்காக) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட இளமாணி பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சமூகப் பணி, உளவளத் துணை அல்லது சமூக அபிவிருத்தித் துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத காலத்தைக் கொண்ட டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ஆ) அரசாங்கத்தில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (நிலையப் பொறுப்பாளர்) பதவியில் ஒரு வருடத்திலும் குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட இளமாணி பட்டத்துடன் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் சமூகப்பணி, உளவளத்துணை அல்லது சமூக அபிவிருத்தி ஆகிய துறைகளுடன் தொடர்பான 1 வருடத்திற்குக் குறையாத டிப்ளோமாவொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் 5 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- MA-3-2016 - ரூபா 32,200 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 5 x 750 ரூபா 54,960 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன்படி சம்பளம் வழங்கப்படும்.
MA-3-2006A - ரூபா 15,600 - 10 x 215 - 4 x 240 - 15 x 320 - 7 x 360 ரூபா 26,030 ரூபா (மாதம்)

9. **பதவி.- மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்) III (பதவி 1) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் சிங்கள/ ஆங்கில மொழிகளில் பெற்றுக்கொண்ட பட்டத்துடன் கல்விப் பொதுத் தராதர (உ. த.) பரீட்சையில் சிங்களம்/ இலக்கியத்தில் மற்றும் தமிழ் மொழி/ இலக்கியத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அத்துடன் சிங்களம்/ தமிழ் மொழிபெயர்ப்புக்களில் நிபுணத்துவம்

மற்றும்

(ஆ) அரசாங்கம் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் தமிழ்/சிங்கள மொழிபெயர்ப்பாளராக 2 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) இணைத்துக்கொள்ளும் முறை.- நியமன அதிகாரி யினால் நியமிக்கப்படுகின்ற நேர்காணல் குழுவின் மூலம் நேர்காணல் நடாத்தப்படும். உயர் புள்ளி களைப் பெற்றவர்களுள் திறமையின் ஒழுங்கின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும்.

(iv) நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை :

| | |
|---|---|
| பதவியுடன் தொடர்பான விடய அனுபவம் | 30 புள்ளிகள் |
| பதவியுடன் தொடர்பான மேலதிக தகுதி | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்களும் ஆற்றலும் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(v) சம்பள அளவுத்திட்டம்.- MA-4-2016 - ரூபா 37,970 - 10 x 755 - 15 x 930 - 5 x 1,135 - ரூபா 65,145 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன்படி சம்பளம் வழங்கப்படும்.
MA 4-2006A - ரூபா 18,230 - 10 x 365 - 15 x 450 - 5 x 550 - 31,380 ரூபா (மாதம்)

10. பதவி.- **கட்புல செவிப்புல நுட்பவியலாளர் III (பதவி 1) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது இந்நிறுவனத்தில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

கல்வித் தகைமை.-

(ii) (அ) கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம், கணிதம் மற்றும் ஏனைய இரு பாடங்களுக்கு விசேட சித்தியுடன் ஒரே தரத்தில் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உ. த.) பரீட்சையில் விஞ்ஞான பாடத்துறையில் அனைத்து பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்து மூன்றாம் நிலைக் கல்வியைத் தொடர்வதற்கான தகுதியினைப் பெற்றிருத்தல்.

(இ) தொழில்நுட்ப திறன்/ ஆற்றல்.- ஒவ்வொரு பதவிக்குமான கடமைகள் பொறுப்புகளுக்கு ஏற்றவாறு மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழிற்திறன் தகைமையில் (NVQ) ஐந்தாம் (5) தரத்திற்கு குறையாத செவிப்புல கட்புல தொழில்நுட்ப பாடநெறியொன்றினை வெற்றிகரமாகப் பின்பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- MA 2-2-2016 - ரூபா 30,310 - 10 x 300 - 7 x 350 - 4 x 600 - 20 x 710 = ரூபா 52,360 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I ஆவது உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன்படி சம்பளம் வழங்கப்படும்.
MA 2-2-2006A - ரூபா 14,610 - 10 x 145 - 7 x 170 - 4 x 290 - 20 x 345 - 25,310 ரூபா (மாதம்)

11. **பதவி.- விடுதி பராமரிப்பாளர் III - (பதவி 1) :**

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்று வோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.-

(அ) சிங்களம் அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட இன்னும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் மற்றும் சமூகப்பணி, உளவளத்துணை அல்லது சமூக அபிவிருத்தி துறையுடன் தொடர்பான 1 வருடத்துக்குக் குறையாத டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.

(iii) உள்வாரி விண்ணபதாரிகளுக்கு.- கல்வித் தகைமை :

(அ) ஆரம்ப தர - திறன் சாராத, பகுதிவாரி திறன் மற்றும் திறன் சேவை தரத்தின்கீழ் (அ), (ஆ), (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை உள்ள பணியாட்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சா. தரத்தில்) ஒரே அமர்வில் முதலாம் தர மொழியில் மற்றும் கணிதம் ஆகிய இரு பாடங்களில் விசேட சித்தியுடன் 6 பாடங்களைவிடக் குறையாத சித்தியுடன் சமூகப்பணி, உளவளத்துணை அல்லது சமூக அபிவிருத்தியுடன் தொடர்பான பாடங்களில் 1 வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல்.

(கணினி தட்டச்சு, தட்டச்சு தொடர்பான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடநெறியொன்றினைப் பயின்றிருத்தல் அல்லது வேறு அதற்குச் சமமான தரத்தில் திறமைகள் உரிய சந்தர்ப்பத்தில் தகைமையாக உள்ளடக்கப்படலாம்.)

(இ) பதவி நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதுடன் அப்பதவியில் நிரந்தரமாக்கப் பட்டிருக்க வேண்டும்.

(ஈ) குறித்த திகதிக்கு முன்னர் நிலையான பதவியின்கீழ் 5 வருட தொடர்ச்சியான திருப்தியான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.

(iv) சம்பள அளவுத்திட்டம்.- MA 1-2-2016 - ரூபா 27,910 - 10 x 300 - 7 x 350 - 12 x 600 - 12 x 710 = ரூபா 49,080 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/ 2016 I உப பிரிவிற்கேற்ப) அச்சுற்றறிக்கையின் உப பிரிவு II இன்படி சம்பளம் வழங்கப்படும்.
MA 1-2-2006A - ரூபா 13,450 - 10 x 145 - 7 x 170 - 12 x 290 - 12 x 345 - ரூபா 23,710 ரூபா (மாதம்)

மேற்குறிப்பிட்ட அனைத்து பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :

(i) பதவி நிரந்தரமானது ;
(ii) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீதத்திற்கு அமைய ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;
(iii) மூன்று வருட தகுதிகாண் நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தல்.

**குறிப்பு**.- இப்பதவி வெற்றிடங்கள் பிரதான அலுவலகத்திலும், கிளிநொச்சி அலுவலகத்திலும் மாத்திரம் காணப்படுவதுடன் தெரிவுசெய்யப்படும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர், சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் பின்வரும் விலாசத்தில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திலும், கிளிநொச்சி அலுவலகத்திலும் பணிபுரிதல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்**.- 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**.- நியமன அதிகாரியினால் குறிப்பிடப்படும் விதத்தில் நேர்காணல் குழுவொன்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். உயர் புள்ளிகள் பெறும் ஒழுங்கில் தெரிவுகள் நடைபெறும்.

விண்ணப்பதாரியின் முழுமையான தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு 2016.12.09 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். முழுமையற்ற, தெளிவற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

கலாநிதி ரிட்லி ஜயசிங்க,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
இல. 488ஏ, நாவல வீதி,
இராஜகிரிய.
2016, ஒற்றோபர் 24.

11-476

## திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

### தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) வகுதி 2 இற்கான சேவைத் தொகையில் பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவியில் III ஆம் தரத்திற்காக (திறந்த) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016

*தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) வகுதி 2 இற்கான சேவைத் தொகையில் பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவிக்காக நிலவுகின்ற வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்காக உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்த பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்படுகின்ற பெண் விண்ணப்பதாரி, தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் கீழுள்ள குளியாப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரியில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக இணைத்துக்கொள்ளப்படுவர். இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி பின்வரும் அறிவுறுத்தல்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த. பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

*விண்ணப்ப முடிவுத் திகதி : 2016.12.11 ஆந் திகதி ஆகும்.*

***குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பிலான கடிதம் போன்றன தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதி வரை தாமதமடையச் செய்வதால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.*

*1.**சேவையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் முறை**.-"கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதோடு, தகைமைகளும் பரீட்சிக்கப்படும்.*

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | அதிகூடிய புள்ளித் தொகை |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| மேலதிக தொழில் தகைமைகள் | 35 |
| மேலதிக அனுபவம் | 30 |
| மொழித் தேர்ச்சி | 10 |
| நேர்முகத் தேர்வின்போது வெளிக்காட்டப்படும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

***2. கல்வித் தகைமைகள் :***

*(1) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் எல்லாமாக ஆறு (6) பாடங்களில் ஒரே அமர்வில் தோற்றி சித்தியடைந்திருத்தல் ; மற்றும்*

*(2) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் குறைந்தது ஒரு (1) பாடமாவது (பொது உளச்சார்பு தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.*

*3. **தொழில் தகைமைகள்**.- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் முகாமைத்துவம் தொடர்பான தேசிய தொழில் தகைமை (NVQ) 4 ஆம் மட்டத்திற்கான முழுநேரப் பாடநெறியைக் கற்று, சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.*

*4. **சேவை அனுபவம்**.- அரசாங்கத்தில் அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றில் உரிய பதவியில்/துறையில் ஒரு வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.*

*5. **உடற்தகைமைகள்**.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

*6.* **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

*7.* **ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரி சிறந்த குணவியல்புகளை உடையவராக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமான சகல தகைமைகளையும் எல்லாவகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*8.* **சம்பள அளவுத்திட்டம்.**- இந்தப் பதவிக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (IV) இற்கு இணங்க சம்பளக் குறியீட்டு இலக்கம் MN-1-2016 : ரூபா 27,140 - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - 45,540 ஐக் கொண்ட (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும்.

*9.* **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள் :**

(i) தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப இலக்கம் 1 முதல் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 10 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரிக்கப்பட்டு, தமது கையெழுத்தின் மூலம் முறையாகப் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள் அல்லது முழுமையான தகவல்களை உள்ளடக்காத விண்ணப்பப்படிவங்கள் அல்லது ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், உரிய பிரிவுக்கான கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், 3/2016 இற்கு அமைவாக MN-7 ஆரம்பப் படிநிலையை அல்லது அதற்கு அதிகமான தொகையினை வருடாந்தத் திரட்டிய சம்பளமாகப் பெறும் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள நிரந்தரப் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது பிரதம மதகுரு அல்லது ஏனைய மத வழிபாட்டு இடங்களின் பொறுப்பு வாய்ந்த மதகுரு ஒருவர் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

(iv) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள், தமது விண்ணப்பப்படிவங்களை அவர்களது திணைக்களத்தின் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

(v) உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டறியப்படின் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அதேபோல் வழங்கப்பட்ட தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்படின் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*10.* **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்தைக் கொண்டதுமாகும். விதவை/ தபுதாரர்/ அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்தப் பதவிக்கு நியமனம் பெறுகின்ற பெண் உத்தியோகத்தர்கள் மூன்று (3) வருடங்கள் நன்னடத்தைக் காலத்துக்கு உட்படுவதோடு, அந்த மூன்று (3) வருட காலத்தினுள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/ 2014 இன் ஏற்பாடுகளுக்கேற்ப அரசகரும மொழி தொடர்பில் உரிய தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) நியமனம் பெறுகின்ற பெண் உத்தியோகத்தர்கள் தேவைக்கேற்ப விடுதியில் தங்கவேண்டியது அவசியமாகும்.

(v) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப்பிரமாணம், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் என்பவற்றுக்கு இந்த நியமனம் கட்டுப்பட்டிருக்கும்.

11. வெற்றிடங்களை நிரப்புகின்ற உரிமை தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உண்டு.

12. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

ஜே. ஏ. ரஞ்சித்,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்,
கொழும்பு 10,
2016, நவெம்பர் 11.

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) வகுதி 2 இற்கான சேவைத் தொகையில் பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவியில் III ஆம் தரத்திற்காக (திறந்த) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016**

1. விண்ணப்பதாரியின் பெயர் :

   (i) முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
   (ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :

   (i) அலுவலக முகவரி :----.
   தொலைபேசி இலக்கம் :----.
   (ii) தனிப்பட்ட முகவரி :----.
   தொலைபேசி இலக்கம் :----.
   (முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கத்தில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :

   ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

   வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
6. பால் (ஆண்/பெண்) :----.
7. குடியியல் நிலைமை :
   விவாகமானவர்/விவாகமாகாதவர்/விதவை போன்றன :----.

8. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா. த.) பரீட்சை :
வருடம் ---- பரீட்சை சுட்டிலக்கம் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உ. த.) பரீட்சை :
வருடம் ---- பரீட்சை சுட்டிலக்கம் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

9. தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | பெற்ற தரம் | நிறுவனத்தின்/பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவைக்காலம் | அரசாங்க/அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் என்பது பற்றியது |
|---|---|---|---|
| | | | |

11. நீர் இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பினாலா/பதிவுசெய்ததன் மூலமா என்பதைக் குறிப்பிடவும் :----.
(பதிவு செய்ததன் மூலம் எனில் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

12. நீர் அரசாங்க சேவையொன்றில் இருந்து நீக்கப்பட்டவரா ? :----.

13. தற்போது அரசாங்க சேவையொன்றில் இருப்பின் உமக்கு எதிராகத் திணைக்களத்தில் ஒழுக்காற்று விசாரணைகள் ஏதேனும் உள்ளனவா ? :----.

14. நீர் ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறு இருப்பின், விபரங்களைக் குறிப்பிடவும் :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பொய்யானது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திருமதி/ செல்வி ........................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் ....................................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

(இப்பகுதியானது அரசாங்கத் தொழிலில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

.................................... அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றும் திருமதி/ செல்வி ............................. ..................... அவர்கள், .................................... எனும் பதவியில் பணியாற்றுபவர் எனவும், இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், இவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து, இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரம் வழங்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

(உத்தியோகபூர்வ முத்திரை)
திகதி :----.

11-518

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

### தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழுள்ள தொழில் திணைக்களத்தில் தொழில் அலுவலர் - II பதவிக்காக ஏற்பட்டுள்ள 89 வெற்றிடங்களுக்கு அரசசேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியுடனான ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழும், மற்றும் අමප / 16/ 0473/ 712/ 005 ஆம் இலக்க 2016.07.26 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் மூலமான அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரமும், மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலமும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. விண்ணப்பங்கோரும் இறுதித் தினத்தன்று, அதாவது 2016.12.14 ஆந் திகதியன்று இவ்வறிவித்தலின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் தரப்பட்டுள்ள தகுதிகளை முழுமையாகக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கொழும்புநகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் இப்பரீட்சை நடாத்தப்படும்.

1. **ஆட்சேர்க்கும் முறை**.- எழுத்துப் பரீட்சையொன்றில் பெறப்படும் திறமை அடிப்படையின் பிரகாரம் தகுதிகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையொன்றின் பின்னர் நியமனங்கள் வழங்கப்படும்.

2. **தகுதிகள்** :

2.1 கல்வித்தகைமைகள்/ தொழில்தகைமைகள்/ அனுபவம் :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல், அல்லது, உயர்நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்துள்ள வழக்கறிஞராயிருத்தல் என்பதுடன், அரச/மாகாண அரசசேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடனான, MN -1 - 2006 - A அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத்திட்டத்தையுடைய பதவியொன்றில் ஐந்து (5) வருடங்களுக்குக் குறையாத முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது,

(ஆ) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் தினத்தன்று அரச/ மாகாண அரசசேவையில் நிரந்தரம் மற்றும் ஓய்வூதியத்துடனான, MN - 1 - 2006 - A அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத்திட்டத்தையுடைய பதவியொன்றில் பத்து (10) வருடங்களுக்குக் குறையாத முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.

2.2 உடற்தகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை புரிவ தற்கும் பதவிக்குரிய உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உரிய உடல் ரீதியானதும் உளரீதியானதுமான தகைமைகளைக் கொண்டிருத்தல்

2.3 வேறு தகைமைகள் :

(i) தற்போது இருக்கும் பதவியில் நிரந்தரமாக இருத்தல்.

(ii) தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டிய தினத்தன்று முடிவடையும் ஐந்து (05) வருட காலப்பகுதியினுள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

(iii) தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டிய தினத்தன்று முடிவடையும் ஐந்து (05) வருட காலப்பகுதியினுள் சகல சம்பள உயர்வுகளையும் உழைத்துப் பெற்றிருத்தல்.

(iv) முடிவடைந்த ஐந்து வருட காலத்தினுள் எச்சரிக்கை தவிர்ந்த வேறு ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகாதிருத்தல்.

(v) விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் தரப்பட்டுள்ள திகதியன்று பதவிக்குத் தேவையான எல்லாத் தகைமைகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல்.

3. **வயதெல்லை**.- பொருத்தமற்றது.

4. **சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான நியதிகளும், சேவை நிபந்தனைகளும்** :

(i) இப்பதவி நிரந்தரமானது.

(ii) இந்நியமனம் ஒரு வருடத்திற்கு பதில் கடமைக் காலத்தைக் கொண்டிருக்கும்.

(iii) நியமனத் திகதியிலிருந்து 03 வருட காலத்தினுள் ஆட்சேர்ப்பு விதிகளுக்கமைவாக முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(iv) பொது நிருவாகச் சுற்றறிக்கை 01/ 2014 இற்கு அமைவாக மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் உத்தியோகபூர்வ மொழிகளுக்கான குறித்துரைக்கப்பட்ட தகைமைகளை நியமனத் திகதியிலிருந்து 05 வருட காலத்தினுள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(v) அரச சேவைக்கான நியமனங்களுக்குரிய பொதுவான நிபந்தனைகளுக்கு அமைவாகவும், அரசசேவைகள் ஆணைக்குழுவின் விதிகள், நிதிப்பிரமாணங்கள், தாபனக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அவற்றுக்குச் செய்யப்படும் திருத்தங்கள், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் ஆகியவற்றுக்கு அமைவாகவும், 2013.09.26 ஆந் திகதிய அரசசேவைகள் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளில்

கூறப்பட்டுள்ள தரங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றுக்கும் அவற்றுக்கு எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கும் அமைவாகவும் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி தொழில் அலுவலர் தரம் II இற்கு நியமிக்கப்படுவார்.

(vi) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி தீவின் எப்பாகத்திலும் தேவைப்படும் பிரதேசத்தில் சேவைபுரிய வேண்டும்.

(vii) தமக்கு வழங்கப்படும் பதவியில் உரிய திகதியன்று கடமையைப் பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/ அல்லது நியமிக்கப்பட்ட பதவிக்குரிய கடமைகளை உரிய பிரதேசத்தில் பொறுப்பேற்பதை நிராகரிக்கும் விண்ணப்பதாரியின் நியமனத்தை இரத்துச்செய்வதற்குரிய அதிகாரம் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு உண்டு.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு 34,605 ரூபா - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - 63,460 ரூபா என்னும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தானது. (2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் MN - 05 – 2016 சம்பளப்பிரிவு - அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளக் கொடுப்பனவு இடம்பெறும்.)

6. **எழுத்துப் பரீட்சை**.- எழுத்துப் பரீட்சையின் வினாப் பத்திரங்கள் 2 இல் சித்தியடைதல் வேண்டும்.

| வினாப்பத்திரம் | காலம் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. தொழில்சட்டங்கள் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 02. விடயஆய்வு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

பரீட்சைகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

விண்ணப்பதாரியொருவர் அரசசேவையில் நுழைவதற்கான தகைமையைப் பெற்ற/ நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் மாத்திரமே பரீட்சைக்குத் தோற்றமுடியும். அவ்வகையில் விண்ணப்பதாரியொருவர் பரீட்சையின் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழியிலேயே விடையளிக்கவேண்டும்.

விண்ணப்பதாரிகள் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் விடையளிக்க வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பொதுவானதொரு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவோரது எண்ணிக்கை, வெற்றிடங்கள் தொடர்பில் நியமிக்கப்படுவோரது எண்ணிக்கை மற்றும் நியமனம் வழங்கப்படும் திகதி ஆகியன தொழில் ஆணையாளர் அதிபதியால் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரிகளில் பலர் ஒரே அளவான மொத்தப் புள்ளிகளைப் பெறும் சந்தர்ப்பத்தில், அரச சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தொழில் ஆணையாளர் அதிபதியால் தீர்மானங்கள் எடுக்கப்படும் என்பதுடன், அத்தீர்மானங்கள் இறுதியானவையாக இருக்கும்.

7. **எழுத்துப் பரீட்சை பின்வரும் விடயங்களில் நடாத்தப்படும் :**

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. தொழில் சட்டங்கள் | பின்வரும் தொழில் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு வினாப்பத்திரம் தயாரிக்கப்படும் :<br>(i) 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச்சபைகள் கட்டளைச்சட்டம்<br>(ii) 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் (சேவை மற்றும் ஊதியங்களை ஒழுங்கமைத்தல்) சட்டம்<br>(iii) 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில்பிணக்குகள் சட்டம்<br>(iv) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர்சேமலாபநிதிச் சட்டம்<br>(v) 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க சேவையாளர்களின் சேவையை முடிவுறுத்தல் (விசேடஏற்பாடுகள்) சட்டம் |

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| | (vi) 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம்<br>(vii) 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தொழிற்சங்கக் கட்டளைச்சட்டம்<br>(viii) 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளையோர் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பான சட்டம்<br>(ix) 1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டம்<br>(x) 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம் |
| 2. விடய ஆய்வு | பரீட்சார்த்திகளின் ஆக்கத்திறன் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் ஆகியவற்றைச் சோதிப்பதற்காக இவ்வினாத்தாள் தயாரிக்கப்படும். இந்நோக்கத்திற்காக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சம்பவங்கள் இணைந்ததான பிரச்சினைகள் தரப்பட்டு அவற்றிலிருந்தான வினாக்களுக்கு விடை கோரப்படும். |

8. **நேர்முகப் பரீட்சை.-** தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக மாத்திரம் பொதுவான நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அந்நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

**கவனிக்க வேண்டிய விடயம்.-** நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது நியமனம் பெறுவதற்குரிய தகுதியாகக் கருதப்பட மாட்டாது.

9. **பரீட்சைக் கட்டணம்.-** பரீட்சைக் கட்டணம் 1,200 ரூபா ஆகும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு முன்பாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன் கீழ், அரச இறைவரிக்குச் சேரத்தக்கதாக, நாடு பூராகவுமுள்ள தபால்/ உபதபால் அலுவலகங்களில் பணமாகச் செலுத்தி, விண்ணப்பதாரியின் பெயருக்குப் பெறப்படும் பற்றுச்சீட்டானது, விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் இலகுவில் அகன்று விடாதபடி ஒட்டப்பட வேண்டும். பரீட்சைக்கட்டணம் தொடர்பாக காசுக்கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், இந்தக் கட்டணம் மீளச்செலுத்தப்படவும் மாட்டாது அல்லது வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவும் மாட்டாது. பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனமானது.

10. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவமானது இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்பதுடன், A4 அளவுத் தாளில், அதன் இருபக்கங்களையும் உபயோகித்து விடயங்கள் 01 முதல் 8.2 வரை தாளின் முன்பக்கத்திலும், விடயங்கள் 09 முதல் 13.10 வரை இரண்டாம் பக்கத்திலும், 13.11 முதல் 15 வரை மூன்றாம் பக்கத்திலும், மிகுதியானவை நான்காம் பக்கத்திலும் வரத்தக்கதாக விண்ணப்பதாரியால் தயாரிக்கப்பட வேண்டும். இதன்பிரகாரம் கணினிமூலம்/ தட்டச்சு மூலம் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட முடியும். ஆயினும் விண்ணப்பத்தில் நிரப்பப்படும் விடயங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் ஒத்திராத மற்றும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் புகைப்படப் பிரதியொன்றை வைத்திருத்தல் பிரயோசனமானது. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்துடன் ஒத்திசைவாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரி எந்த மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகிறாரோ, அந்த மொழியிலேயே விண்ணப்பம் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பமானது சிங்களத்தில் அல்லது தமிழில் நிரப்பப்படும்பொழுது, அதன் தலைப்பில் பரீட்சையின் பெயர் சிங்களத்துக்கு அல்லது தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.

(இ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது உள்ள, விண்ணப்பதாரியின் பதவி மற்றும் சேவைநிலையம் ஆகியன பரீட்சை தொடர்பான எல்லா விடயங்களிலும் தொடர்புடையது என்பதால், விண்ணப்பித்த பின்பு அது தொடர்பாக ஏற்படும் எந்தவொரு மாற்றமும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை திணைக்களத்தலைவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலரால் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

(உ) குறைபாடுகள் எதுவுமின்றிப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் 2016.12.14 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2016" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். மேற்படி தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
நிறுவனங்களுக்கான மற்றும் வெளிவாரிப்பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த.பெ. இல: 1503, கொழும்பு.

(ஊ) சகல விதங்களிலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற்போதல் அல்லது தாமதமாகக் கிடைத்தல் ஆகியன கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

11. விண்ணப்பதாரிகளுக்குரிய பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டமை பற்றி புதினப் பத்திரிகைகளில் அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்படும். அவ்வாறு அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களுள் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிட்டால், அவ்வறிவித்தலில் குறிப்பிடப்படும் விதத்தில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனங்களுக்கான மற்றும் வெளிவாரிப்பரீட்சைகள் கிளையுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். அந்த அறிவித்தலில் கேட்கப்படும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் ஏனைய தகவல்கள் ஆகியவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகள், தமக்குரிய அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை தொலைநகல்மூலம் பெற்றுக்கொள்வதற்காக ஒரு தொலைநகல் இலக்கத்தையும், உரிய தகவல்களுடன் அவ்வறிவித்தலில் தரப்படும் தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவது பயனுள்ளதாக அமையும். மேலும், அச்சந்தர்ப்பத்தில் பரீட்சைகள் திணைக்களத்தால் கேட்கப்படும் அவசியமான தகவல்களை உடனடியாக வழங்குவதற்காக, விண்ணப்பப்படிவம், பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச்சீட்டு, விண்ணப்பத்தை அனுப்பிய பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டு ஆகியவற்றின் பிரதிகளைத் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

12. **பரீட்சைக்குத் தோற்றுதல்** :

(அ) சகலவிதங்களிலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கே பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ்வாறான அனுமதிப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரி எவரும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமக்குரிய பரீட்சை மண்டபத்தில் தமக்குரிய சுட்டெண்ணுடன் பரீட்சை எழுதுதல் வேண்டும். அவர், உறுதிப்படுத்திய தமது கையொப்பத்துடன்கூடிய அனுமதிப்பத்திரத்தை பரீட்சைக்குத் தோற்றும் தினத்தன்று பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் விதிக்கப்படும் பரீட்சைகள் தொடர்பான விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டவராவார். அவர் அவற்றை மீறுவாராயின், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்படும் தண்டனைகளுக்கு உரியவராவார். பரீட்சையை நடாத்துவது மற்றும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது ஆகியன தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானங்களே இறுதியானவையாகும்.

(ஈ) பரீட்சைப் பெறுபேறுகள்.- ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்கும் குறையாது புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளது பெயர்கள்அடங்கிய பெறுபேற்று அட்டவணை அரசசேவைகள் ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறு அறிவிக்கப்படுவதுடன், www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்திலும் வெளியிடப்படும்.

**குறிப்பு**.- பரீட்சைக்கான அனுமதிப் பத்திரமொன்றை விண்ணப்பதாரி ஒருவருக்கு வழங்குதலானது மாத்திரம், அவ்விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைக் கொண்டுள்ளார் எனக் கருதுவதற்குப் போதுமானதாக மாட்டாது.

13. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சை தொடர்பாக, அப்பரீட்சையின் பிரதான மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக, பின்வரும் ஆவணங்களில் ஓர் ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

14. **பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை.**- விண்ணப்பதாரி ஒருவர் தகைமையற்றவர் என்பது தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரி ஒருவர் சமர்ப்பித்த எந்தவொரு பிழையான விடயமும் அவரால் தெரிந்துகொண்டே சமர்ப்பிக்கப்பட்டது, அல்லது தேவையான ஒரு விடயம் அவரால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டது என்பது தெரியவந்தால், அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

15. தொழில் அலுவலர் பதவிக்கான ஏதாவது வெற்றிடங்களை அல்லது வெற்றிடங்கள் முழுவதையும் நிரப்பாமல் விடுவதற்கும், இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்படாது விட்ட ஏதாவது விடயம் தொடர்பாக முடிவுகளை மேற்கொள்வதற்கும் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

16. இந்த அறிவித்தலானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டிருப்பினும், அவற்றிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுடையதாகும்.

அரசசேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

தொழில் ஆணையாளர் அதிபதி,
தொழில் திணைக்களம்.

தொழில் செயலகம்,
நாராஹென்பிட்ட,
கொழும்பு 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2016

Limited Competitive Examination for Recruitment to the Post of Labour Officer – II in the Department of Labour - 2016

1. மொழி -
பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

விண்ணப்பப்படிவம் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமே நிரப்பப்படுதல் வேண்டும்.

2. தனிப்பட்ட தகவல்கள் -

2.1 முதலெழுத்துக்கள் பின்னால் வரத்தக்கதாக, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக் களில்) :----.
(உ-ம் : SILVA A.B.D.P.A)
2.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.3 முழுப்பெயர் (சிங்களத்தில் / தமிழில்) :----.

3. 3.1 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கே தபாலில் அனுப்பப்படும்)
3.2 அலுவலக முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
3.3 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

4. பால் : (ஆண் - 0, பெண் - 1) ☐

(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

5. தேசிய அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

6. விவாக அந்தஸ்து :
(விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2) ☐

(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

7. இனம் - (சிங்களவர் - 1, தமிழர் - 2, இந்தியத்தமிழர் - 3, முஸ்லிம் - 4, ஏனையவர் - 5) ☐

(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

8. 8.1 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

8.2 2016.12.14 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

9. தொலைபேசி இல.

10. நீர் 2016.12.14 ஆந் திகதியன்று சேவையில் சேர்ந்த பதவிக்கு / சேவைக்கு / தரத்திற்கு உள்ளீர்க்கப்படுவதற்காக தகைமையைப் பெற்றுக்கொண்ட பரீட்சை/ நேர்முகப் பரீட்சை சித்தியடைந்த மொழிமூலத்தைக் குறிப்பிடுக :----.

11. 2016.12.14 ஆந் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பகுதியின் பிரகாரம் சகல தகைமைகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளனவா ? :----.

12. கல்வித் தகைமைகளும் அனுபவமும் :

12.1 பட்டம் :----.

12.2 பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.

12.3 தேர்ச்சி (விசேட வகுப்புகள் ஏதும்பெற்றிருப்பின், குறிப்பிடுக) :----.

12.4 பட்டம் பெற்ற திகதி :----.

12.5 பட்டம் பெற்ற மொழிமூலம் :----.

12.6 வழக்கறிஞராக உயர்நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

(உரியதாயின் மாத்திரம் குறிப்பிடுக)

13. அனுபவம் :----.

13.1 பரீட்சைக்குத் தகைமை பெறுவதற்கான சேவையை/ தரத்தை (வகுப்பு, தரம் அல்லது பிரிவு ஏதும் இருப்பின்) குறிப்பிடுக :----.

13.2 தற்போது வகிக்கும் பதவி :----.

13.3 அப்பதவி அரச சேவைக்குரியதா அல்லது மாகாண அரச சேவைக்குரியதா ? :----.

13.4 தரம் :----.

13.5 வகுப்பு / பிரிவு :----.

13.6 பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

13.7 அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.

13.8 சம்பளப் பிரிவின் இலக்கம் :----.

13.9 சம்பள அளவுத்திட்டம் :----.

13.10 விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெற்றமைக்கு பல சேவைகள் இருக்குமாயின், அவ்வாறான தரங்களும் திருப்திகரமான சேவைக்காலங்களும் பற்றி பின்வரும் அட்டவணையில் குறிப்பிடுக :

| சேவையின்/ தரத்தின் பெயர் | உரிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின்படி சம்பளப் பிரிவின் இல. (உதா : MN-1-2006-A) | நியமனத் திகதி | நிரந்தரமாக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| (1) ................................ | ........................................... | ....................................... | ..................................... |
| (2) ................................ | ........................................... | ....................................... | ..................................... |
| (3) ................................ | ........................................... | ....................................... | ..................................... |
| (4) ................................ | ........................................... | ....................................... | ..................................... |

13.11 வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பகுதியின் நிபந்தனைகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட பதவியில் 2016.12.14 ஆந் திகதியன்று முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலம் :----.

14. பரீட்சைக்கட்டணம் செலுத்துதல் :

14.1 செலுத்திய தொகை :----.

14.2 செலுத்திய தபால் / உபதபால் அலுவலகம் :----.

14.3 செலுத்திய திகதி :----.

14.4 பற்றுச்சீட்டு இல. :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை இலகுவில் அகற்ற முடியாத வகையில் அதன் ஒரு ஓரத்தில் இங்கே ஒட்டுக.<br>(பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை வைத்திருத்தல் உபயோகமானது) |

15. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

2016.12.14 ஆந் திகதியில் முடிவுற்ற ஐந்து வருட காலப்பகுதியினுள் எல்லாச் சம்பள உயர்வுகளையும் உழைத்துப் பெற்றுள்ளேன் எனவும், வர்த்தமானி அறிவித்தலின் 2.1 ஆம் பகுதியின் பிரகாரம் 2016.12.14 ஆந் திகதியில் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவையைக் கொண்டுள்ளேன் எனவும், (எச்சரிக்கை தவிர்ந்த) வேறு ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகாதுள்ளேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

நான், வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி இந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான தகைமைகளைக் கொண்டுள்ளேன் எனவும், விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணத்திற்கான ............................. ஆம் இலக்க .............................. ஆந் திகதிய பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன். பரீட்சைக்கான ஒழுங்குவிதிகளுக்கு இயைந்து நடப்பேன் எனவும், இப்பரீட்சைக்கான நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவராக இருந்தால், பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது விண்ணப்பம் செல்லுபடியற்றதாகும் என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். மேலும், பரீட்சைகளை நடாத்துவது தொடர்பான பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியின் ஒழுங்குவிதிகள் யாவற்றுக்கும் இணங்கியொழுகச் சம்மதிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (வர்த்தமானி அறிவித்தலின் பிரிவு 10(ஈ) இன் பிரகாரம்) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ........................................................................................ (விண்ணப்பதாரியின் முழுப்பெயர்) என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும், .................................... ஆந் திகதியன்று தனது கையொப்பத்தை என்முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரது முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்) :----.
திகதி :----.

17. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (விண்ணப்பதாரியின் பெயர்வழிக் கோவையின் பிரகாரம்) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................................................................ ..................... என்பவர் மத்திய அரச/ மாகாண அரச ........................................................................................ என்னும் அமைச்சின்/ திணைக்களத்தின் ................................................................................ என்னும் பதவியில் சேவை புரிகிறார் எனவும், 2016.12.14 ஆந் திகதியன்று முடிவடைந்த ஐந்து வருட காலத்தினுள் அவரது சம்பள உயர்வுகளை உழைத்துப் பெற்றுள்ளார் எனவும், வர்த்தமானி அறிவித்தலின் 2.1 ஆம் பகுதியின் பிரகாரம் ................. வருடங்கள் (ஐந்து / பத்து) முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும், உரிய வர்த்தமானி அறிவித்தலின்படி உரிய ஒழுங்குவிதிகளுக்கமைவாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளார் எனவும், எனது முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் தமது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின்/ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
(உத்தியாகபூர்வ முத்திரை இடப்பட வேண்டும்) :----.
திகதி :----.

11-857/ 1

---

## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

### தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழுள்ள தொழில் திணைக்களத்தில் தொழில் அலுவலர் - II பதவிக்காக ஏற்பட்டுள்ள 89 வெற்றிடங்களுக்கு அரசசேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியுடனான ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரமும், மற்றும் අමප / 16/ 0473/ 712/ 005 ஆம் இலக்க 2016.07.26 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் மூலமான அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரமும், திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. விண்ணப்பங்கோரும் இறுதித் தினத்தன்று, அதாவது 2016.12.14 ஆந் திகதியன்று இவ்வறிவித்தலின் 02 ஆம் மற்றும் 3 ஆம் பந்திகளின் பிரகாரம் தரப்பட்டுள்ள தகுதிகளை முழுமையாகக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கொழும்புநகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் இப்பரீட்சை நடாத்தப்படும்.

1. **ஆட்சேர்க்கும் முறை.**- எழுத்துப் பரீட்சையொன்றில் பெறப்படும் திறமை அடிப்படையின் பிரகாரம் தகுதிகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையொன்றின் பின்னர், நியமனங்கள் வழங்கப்படும்.

*2.* **தகுதிகள்** :

*2.1* கல்வித் தகைமைகள் :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஆ) உயர் நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்துள்ள வழக்கறிஞராயிருத்தல்.

*2.2* உடற்தகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை புரிவ தற்கும் பதவிக்குரிய உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உரிய உடல்ரீதியானதும் உளரீதியானதுமான தகைமைகளைக் கொண்டிருத்தல்

*2.3* ஏனைய தகைமைகள் :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்.

(ii) மிகச்சிறந்த நற்பண்புகளைக் கொண்டிருத்தல்.

(iii) விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் தரப்பட்டுள்ள திகதியன்று பதவிக்குத் தேவையான எல்லாத் தகைமைகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல்.

*3.* **வயதெல்லை**.- விண்ணப்பிப்பதற்குரிய இறுதித் திகதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்குக் கூடுதலாக இல்லாமலும் இருத்தல். (இதன் பிரகாரம் 1995.12.14 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1981.12.14 ஆந் திகதிக்குப் பின்னர் பிறந்த தினத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க முடியும்).

*4.* **சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான நியதிகளும், சேவை நிபந்தனைகளும்** :

(i) இப்பதவி நிரந்தரமானது.

(ii) இந்நியமனம் மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் காலத்தைக் கொண்டிருக்கும்.

(iii) நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்தினுள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையை பூர்த்திசெய்தல் வேண்டும்.

(iv) பொது நிருவாகச் சுற்றறிக்கை 01/ 2014 இற்கு அமைவாக மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும் மொழி மூலத்திற்கு மேலதிகமாக மற்றைய உத்தியோகபூர்வ மொழிகளுக்கான குறித்துரைக்கப்பட்ட தகைமைகளை நியமனத் திகதியிலிருந்து 05 வருட காலத்தினுள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன், அரசகருமமொழி அல்லாத வேறு மொழி மூலம் சேவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் தகுதிகாண் காலத்தினுள் உரியஅரசகரும மொழித்தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளுதலும் வேண்டும்.

(v) அரச சேவைக்கான நியமனங்களுக்குரிய பொதுவான நிபந்தனைகளுக்கு அமைவாகவும், அரசசேவைகள் ஆணைக்குழுவின் விதிகள், நிதிப்பிரமாணங்கள், தாபனக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அவற்றுக்குச் செய்யப்படும் திருத்தங்கள், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் ஆகியவற்றுக்கு அமைவாகவும், 2013.09.26 ஆந் திகதிய அரசசேவைகள் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளில் கூறப்பட்டுள்ள தரங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றுக்கும் அவற்றுக்கு எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கும் அமைவாகவும் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி தொழில் அலுவலர் தரம் II இற்கு நியமிக்கப்படுவார்.

(vi) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி தீவின் எப்பாகத்திலும் தேவைப்படும் பிரதேசத்தில் சேவைபுரிய வேண்டும்.

(vii) தமக்கு வழங்கப்படும் பதவியில் உரிய திகதியன்று கடமையைப் பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/ அல்லது நியமிக்கப்பட்ட பதவிக்குரிய கடமைகளை உரிய பிரதேசத்தில் பொறுப்பேற்பதை நிராகரிக்கும் விண்ணப்பதாரியின் நியமனத்தை இரத்துச்செய்வதற்குரிய அதிகாரம் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு உண்டு.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு 34,605 ரூபா - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - 63,460 ரூபா என்னும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தானது. (2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் MN - 05 – 2016 சம்பளப்பிரிவு - அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளக் கொடுப்பனவு இடம்பெறும்.)

6. **எழுத்துப் பரீட்சை**.- எழுத்துப் பரீட்சையின் வினாத்தாள்கள் இரண்டில் சித்தியடைதல் வேண்டும்.

| வினாப்பத்திரம் | காலம் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. கட்டுரையும் சுருக்கமும் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 02. பொது உளச்சார்பு | 1 மணித்தியாலம் | 100 | 40 |

பரீட்சைகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

விண்ணப்பதாரிகள் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் விடையளிக்க வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பொதுவானதொரு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவோரது எண்ணிக்கை, வெற்றிடங்கள் தொடர்பில் நியமிக்கப்படுவோரது எண்ணிக்கை மற்றும் நியமனம் வழங்கப்படும் திகதி ஆகியன தொழில் ஆணையாளர் அதிபதியால் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரிகளில் பலர் ஒரே அளவான மொத்தப் புள்ளிகளைப் பெறும் சந்தர்ப்பத்தில், அரச சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தொழில் ஆணையாளர் அதிபதியால் தீர்மானங்கள் எடுக்கப்படும் என்பதுடன், அத்தீர்மானங்கள் இறுதியானவையாக இருக்கும்.

7. எழுத்துப் பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்கள் பின்வருமாறு :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. கட்டுரையும் சுருக்கமும் | இவ்வினாப் பத்திரம் உள்நாட்டு ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் இடம்பெறும் முக்கியமான அரசியல், பொருளாதார, சமூக விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும் |
| 2. பொது உளச்சார்பு | இவ்வினாப் பத்திரம் விண்ணப்பதாரியின் மொழி, கணிதம், தர்க்கரீதியான சிந்தனை, முடிவெடுக்கும் தன்மை ஆகிய இயலுமைகளைப் பரீட்சிப்பதாக அமையும் |

8. **நேர்முகப் பரீட்சை**.- தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக மாத்திரம் பொதுவான நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அந்நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

**கவனிக்க வேண்டிய விடயம்**.- நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது நியமனம் பெறுவதற்குரிய தகுதியாகக் கருதப்பட மாட்டாது.

9. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 1,200 ரூபாவாகும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு முன்பாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத்தலைப்பு 2003-02-13 இன் கீழ், அரச இறைவரிக்குச் சேரத்தக்கதாக, நாடு பூராகவுமுள்ள தபால்/ உபதபால் அலுவலகங்களில் பணமாகச் செலுத்தி, விண்ணப்பதாரியின் பெயருக்கு பெறப்படும் பற்றுச்சீட்டானது, விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் இலகுவில் அகன்றுவிடாதபடி ஒட்டப்படல் வேண்டும். பரீட்சைக்கட்டணம் தொடர்பாக காசுக்கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், இந்தக் கட்டணம் மீளச்செலுத்தப்படவும் மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனமானது.

10. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) விண்ணப்பப்படிவமானது இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்பதுடன், A4 அளவுத் தாளில், அதன் இருபக்கங்களையும் உபயோகித்து விடயங்கள் 01 முதல் 8.2 வரை தாளின் முன்பக்கத்திலும், விடயங்கள் 9 முதல் 14 வரை தாளின்

மறுபக்கத்திலும், மிகுதி விடயங்கள் இன்னொரு தாளின் மூன்றாம் பக்கத்திலும் வரத்தக்கதாக தயாரிக்கப்பட வேண்டும். இதன்பிரகாரம் கணினிமூலம்/ தட்டச்சு மூலம் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட முடியும். ஆயினும் விண்ணப்பத்தில் நிரப்பப்படும் விடயங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் ஒத்திராத மற்றும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் புகைப்படப் பிரதியொன்றை வைத்திருத்தல் பிரயோசனமானது. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்துடன் ஒத்திசைவாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரி எந்த மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகிறாரோ, அந்த மொழியிலேயே விண்ணப்பம் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பமானது சிங்களத்தில் அல்லது தமிழில் நிரப்பப்படும்பொழுது, அதன் தலைப்பில் பரீட்சையின் பெயர் சிங்களத்துக்கு அல்லது தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.

(இ) விண்ணப்பதாரியின் கையொப்பம் விண்ணப்பத்திலும், பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஏதாவது நிறுவனமொன்றினூடாக விண்ணப்பிப்பவரது கையொப்பம் அந்நிறுவனத் தலைவராலோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவராலோ உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை அதிபர் ஒருவரால்/ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரால் /கிராம அலுவலரால் /சமாதான நீதவான் ஒருவரால்/ சத்தியப்பிரமாண ஆணையாளரொருவரால் /வழக்கறிஞரொருவரால் /பிரசித்த நொத்தாரிசு ஒருவரால்/ முப்படைகளில் ஆணை வழங்கத்தக்க அதிகாரி ஒருவரால் / அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் 2,40,360 ரூபாவிற்குக் குறையாத வருடாந்த திரட்டிய சம்பளம் பெறும் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரால் / ஒரு பௌத்த விகாரையின் பிரதம மதகுருவால் / மகாநாயக்க தேரர் ஒருவரால்/வேறு மத வணக்க ஸ்தலமொன்றின் மதகுருவால் அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க மதப் பெரியாரால் சான்றுப்படுத்தப்படவேண்டும்.

(ஈ) குறைபாடுகள் எதுவுமின்றிப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் 2016.12.14 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். மேற்படி தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
நிறுவனங்கள் மற்றும் வெளிவாரிப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த.பெ. இல: 1503, கொழும்பு.

(உ) சகல விதங்களிலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற்போதல் அல்லது தாமதமாகக் கிடைத்தல் ஆகியன கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பதாரிகளுக்குரிய பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டமை பற்றி புதினப் பத்திரிகைகளில் அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்படும். அவ்வாறு அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களுள் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிட்டால், அவ்வறிவித்தலில் குறிப்பிடப்படும் விதத்தில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனங்களுக்கான மற்றும் வெளிவாரிப்பரீட்சைகள் கிளையுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். அந்த அறிவித்தலில் கேட்கப்படும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் ஏனைய தகவல்கள் ஆகியவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகள், தமக்குரிய அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை தொலைநகல்மூலம் பெற்றுக்கொள்வதற்காக ஒரு தொலைநகல் இலக்கத்தையும், உரிய தகவல்களுடன் அவ்வறிவித்தலில் தரப்படும் தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவது பயனுள்ளதாக அமையும். மேலும், அச்சந்தர்ப்பத்தில் பரீட்சைகள் திணைக்களத்தால் கேட்கப்படும் அவசியமான தகவல்களை உடனடியாக வழங்குவதற்காக, விண்ணப்பப்படிவம், பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச்சீட்டு, விண்ணப்பத்தை அனுப்பிய பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டு ஆகியவற்றின் பிரதிகளைத் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

11. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) சகலவிதங்களிலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கே பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ்வாறான அனுமதிப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரி எவரும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமக்குரிய பரீட்சை மண்டபத்தில் தமக்குரிய சுட்டெண்ணுடன் பரீட்சை எழுதுதல் வேண்டும். அவர், உறுதிப்படுத்திய தமது கையொப்பத்துடன்கூடிய அனுமதிப்பத்திரத்தை பரீட்சைக்குத் தோற்றும் தினத்தன்று பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் விதிக்கப்படும் பரீட்சைகள் தொடர்பான விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டவராவார். அவர் அவற்றை மீறுவாராயின், பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் வழங்கப்படும் தண்டனைகளுக்கு உரியவராவார். பரீட்சையை நடாத்துவது மற்றும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது ஆகியன தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியின் தீர்மானங்களே இறுதியானவையாகும்.

(ஈ) பரீட்சைப் பெறுபேறுகள்.- ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்கும் குறையாது புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளது பெயர்கள்அடங்கிய பெறுபேற்று அட்டவணை அரசசேவைகள் ஆணைக்குழு செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறு அறிவிக்கப்படுவதுடன், www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்திலும் வெளியிடப்படும்.

**குறிப்பு**.- பரீட்சைக்கான அனுமதிப் பத்திரமொன்றை விண்ணப்பதாரி ஒருவருக்கு வழங்குதலானது மாத்திரம், அவ்விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைக் கொண்டுள்ளார் எனக் கருதுவதற்குப் போதுமானதாக மாட்டாது.

12. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சை தொடர்பாக, அப்பரீட்சையின் பிரதான மேற்பார்வையாளர் திருப்தியுறும்வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக, பின்வரும் ஆவணங்களில் ஓர் ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

13. **பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- விண்ணப்பதாரி ஒருவர் தகைமையற்றவர் என்பது தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரி ஒருவர் சமர்ப்பித்த எந்தவொரு பிழையான விடயமும் அவரால் தெரிந்துகொண்டே சமர்ப்பிக்கப்பட்டது, அல்லது தேவையான ஒரு விடயம் அவரால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டது என்பது தெரியவந்தால், அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

14. தொழில் அலுவலர் பதவிக்கான ஏதாவது வெற்றிடங்களை அல்லது வெற்றிடங்கள் முழுவதையும் நிரப்பாமல் விடுவதற்கும், இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்படாது விட்ட ஏதாவது விடயம் தொடர்பாக முடிவுகளை மேற்கொள்வதற்கும் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

15. இந்த அறிவித்தலானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டிருப்பினும், அவற்றிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுடையதாகும்.

அரசசேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

தொழில் ஆணையாளர் அதிபதி,
தொழில் திணைக்களம்.

தொழில் செயலகம்,
நாராஹென்பிட்ட,
கொழும்பு 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

**Open Competitive Examination for Recruitment to the Post of Labour Officer – II in the Department of Labour - 2016**

1. மொழி -
   பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : சிங்களம் - 2
   தமிழ் - 3
   ஆங்கிலம் - 4
   (உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

   விண்ணப்பப்படிவம் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமே நிரப்பப்படுதல் வேண்டும்.

2. தனிப்பட்ட தகவல்கள் -

   2.1 முதலெழுத்துக்கள் பின்னால் வரத்தக்கதாக, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
   (உ-ம் : SILVA A.B.D.P.A)
   2.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   2.3 முழுப்பெயர் (சிங்களத்தில் / தமிழில்) :----.

3. 3.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கே தபாலில் அனுப்பப்படும்)
   3.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
   3.3 உத்தியோகபூர்வ முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

4. பால் : (ஆண் - 0, பெண் - 1)
   (உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

5. தேசிய அடையாள அட்டை இல. :

6. விவாக அந்தஸ்து :
   (விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2)
   (உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

7. இனம் - (சிங்களவர் - 1, தமிழர் - 2, இந்தியத்தமிழர் - 3, முஸ்லிம் - 4, ஏனையவர் - 5)
   (உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

8. 8.1 பிறந்த திகதி :

   ஆண்டு மாதம் திகதி

   8.2 2016.12.14 ஆந் திகதியன்று வயது :

   வருடங்கள் மாதங்கள் நாட்கள்

9. தொலைபேசி இல.

10. கல்வித் தகைமைகளும் அனுபவமும் :

10.1 பட்டம் :----.
10.2 பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
10.3 தேர்ச்சி (விசேட வகுப்புகள் ஏதும்பெற்றிருப்பின், குறிப்பிடுக) :----.
10.4 பட்டம் பெற்ற திகதி :----.
10.5 பட்டம் பெற்ற மொழிமூலம் :----.
10.6 வழக்கறிஞராக உயர்நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.
(உரியதாயின் மாத்திரம் குறிப்பிடுக)

11. நீர் ஏதாவது குற்றநடவடிக்கைகளுக்காக நீதிமன்றில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா ? :----.
ஆம் எனில், விபரம் தருக :----.

12. நீர் முன்னர் ஏதாவது அரசசேவையில் இருந்து அது முடிவுறுத்தப்பட்டதா ? :----.
ஆம் எனில், அது தொடர்பான விபரங்களும், உமது அச்சேவை முடிவுறுத்தப்பட்டதற்கான காரணமும் :----.

13. பரீட்சைக்கட்டணம் செலுத்துதல் :

13.1 செலுத்திய தொகை :----.
13.2 செலுத்திய தபால் / உபதபால் அலுவலகம் :----.
13.3 செலுத்திய திகதி :----.
13.4 பற்றுச்சீட்டு இல. :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை இலகுவில் அகற்ற முடியாத வகையில் அதன் ஒரு ஓரத்தில் இங்கே ஒட்டுக (பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை வைத்திருத்தல் உபயோகமானது) |

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்ற ........................................ ஆம் இலக்க ............ .............................. ஆந் திகதிய பற்றுச்சீட்டை மேலே ஒட்டியுள்ளேன் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன். மேலும் பரீட்சை விதிமுறைகளுக்கு அமைவாக நடந்துகொள்வேன் எனவும், இந்தப் பரீட்சை தொடர்பான விதிமுறைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவர் எனத் தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின்போது அல்லது அதன் பின்னர் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்ற முடிவுக்கு நான் இணங்குகிறேன். மேலும், பரீட்சையை நடாத்துதல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் நடைமுறைப்படுத்தப்படும் விதிமுறைகளுக்கு உட்படுவேன் எனப் பிரகடனம் செய்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின்கையொப்பம்.

திகதி :----.

15. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்** (வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆம் பந்தியின் (இ) பிரிவின்படி இருத்தல் வேண்டும்) -

இந்த விண்ணபத்தைச் சமர்ப்பிக்கும் ………………………………………………………………………………… (விண்ணப்பதாரியின் முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும், தனது கையொப்பத்தை …………………………………… ஆந் திகதியன்று என் முன்னிலையில் இட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரது முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்) :----.
திகதி :----.

16. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (அரச /மாகாணசபை /அரச கூட்டுத்தாபன சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி /செல்வி ............................................................................என்பவர் இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் ............................................................................ என்னும் பதவியில் சேவை புரிகிறார் என்பதால், அவரது விண்ணப்பத்தைச் சிபார்சுசெய்து முன்னளிக்கிறேன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால், இந்நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
(உத்தியாகபூர்வ முத்திரை இடப்பட வேண்டும்) :----.
திகதி :----.

11-857/2

---

## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

### தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்கான வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தமிழ் மொழியிலான திறந்த விசேட போட்டிப் பரீட்சை - 2016

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழுள்ள தொழில் திணைக்களத்தில் தொழில் அலுவலர் - II பதவிக்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள 12 தமிழ் மொழியிலான வெற்றிடங்களுக்கு அரசசேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியுடனான ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரமும், மற்றும் අමප /16/0473/712/005 ஆம் இலக்க 2016.07.26 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் மூலமான அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரமும், திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. விண்ணப்பங்கோரும் இறுதித் தினத்தன்று, அதாவது 2016.12.14 ஆந் திகதியன்று இவ்வறிவித்தலின் 2 ஆம், 3 ஆம் பந்திகளின் பிரகாரம் தரப்பட்டுள்ள தகுதிகளை முழுமையாகக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கொழும்பு நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் இப்பரீட்சை நடாத்தப்படும்.

1. **ஆட்சேர்க்கும் முறை**.- எழுத்துப் பரீட்சையொன்றில் பெறப்படும் திறமை அடிப்படையின் பிரகாரம் தகுதிகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையொன்றின் பின்னர், நியமனங்கள் வழங்கப்படும்.

2. **தகுதிகள்** :

2.1 கல்வித் தகைமைகள் :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஆ) உயர் நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்துள்ள வழக்கறிஞராயிருத்தல்.

2.2 உடற்றகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்குரிய உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உரிய உடல் ரீதியானதும் உளரீதியானதுமான தகைமைகளைக் கொண்டிருத்தல்

2.3 ஏனைய தகைமைகள் :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்

(ii) மிகச்சிறந்த நற்பண்புகளைக் கொண்டிருத்தல்

(iii) விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் தரப்பட்டுள்ள திகதியன்று பதவிக்குத் தேவையான எல்லாத் தகைமைகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல்

3. **வயதெல்லை**.- விண்ணப்பிப்பதற்குரிய இறுதித் திகதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்குக் கூடுதலாக இல்லாமலும் இருத்தல். (இதன் பிரகாரம் 1995.12.14 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1981.12.14 ஆந் திகதிக்குப் பின்னர் பிறந்த தினத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க முடியும்).

4. **சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான நியதிகளும், சேவை நிபந்தனைகளும்** :

(i) இப்பதவி நிரந்தரமானது.

(ii) இந்நியமனம் மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் காலத்தைக் கொண்டிருக்கும்.

(iii) நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்தினுள் முதலாவது வினைத்திறமை காண்தடையைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(iv) பொது நிருவாகச் சுற்றறிக்கை 01/ 2014 இற்கு அமைவாக மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும் மொழி மூலத்திற்கு மேலதிகமாக மற்றைய உத்தியோகபூர்வ மொழிகளுக்கான குறித்துரைக்கப்பட்ட தகைமைகளை நியமனத் திகதியிலிருந்து 05 வருட காலத்தினுள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன், அரசகருமமொழி அல்லாத வேறு மொழி மூலம் சேவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் தகுதிகாண் காலத்தினுள் உரிய அரசகரும மொழித்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்.

(v) அரச சேவைக்கான நியமனங்களுக்குரிய பொதுவான நிபந்தனைகளுக்கு அமைவாகவும், அரசசேவைகள் ஆணைக்குழுவின் விதிகள், நிதிப்பிரமாணங்கள், தாபனக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அவற்றுக்குச் செய்யப்படும் திருத்தங்கள், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் ஆகியவற்றுக்கு அமைவாகவும், 2013.09.26 ஆந் திகதிய அரசசேவைகள் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளில் கூறப்பட்டுள்ள தரங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றுக்கும் அவற்றுக்கு எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கும் அமைவாகவும் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி தொழில் அலுவலர் தரம் II இற்கு நியமிக்கப்படுவார்.

(vi) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி பதவியேற்கும் தினத்திலிருந்து 8 வருட காலத்திற்கு வடக்கு அல்லது கிழக்கு மாகாணத்தில் கட்டாயச் சேவைக்காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

(vii) தமக்கு வழங்கப்படும் பதவியில் உரிய திகதியன்று கடமையைப் பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/ அல்லது நியமிக்கப்பட்ட பதவிக்குரிய கடமைகளை உரிய பிரதேசத்தில் பொறுப்பேற்பதை நிராகரிக்கும் விண்ணப்பதாரியின் நியமனத்தை இரத்துச்செய்வதற்குரிய அதிகாரம் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு உண்டு.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு ரூ. 34,605 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - ரூ. 63,460 என்னும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தானது. (2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கையின் MN - 05 – 2016 சம்பளப்பிரிவு - அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளக் கொடுப்பனவு இடம்பெறும்.)

6. **எழுத்துப் பரீட்சை**.- எழுத்துப் பரீட்சையின் வினாத்தாள்கள் இரண்டில் சித்தியடைதல் வேண்டும்.

| வினாப்பத்திரம் | காலம் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. கட்டுரையும் சுருக்கமும் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 02. பொது உளச்சார்பு | 1 மணித்தியாலம் | 100 | 40 |

பரீட்சைகள் தமிழ் மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படும்.

விண்ணப்பதாரிகள் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் விடையளிக்க வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பொதுவானதொரு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவோரது எண்ணிக்கை, வெற்றிடங்கள் தொடர்பில் நியமிக்கப்படுவோரது எண்ணிக்கை மற்றும் நியமனம் வழங்கப்படும் திகதி ஆகியன தொழில் ஆணையாளர் அதிபதியால் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரிகளில் பலர் ஒரே அளவான மொத்தப் புள்ளிகளைப் பெறும் சந்தர்ப்பத்தில், அரச சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தொழில் ஆணையாளர் அதிபதியால் தீர்மானங்கள் எடுக்கப்படும் என்பதுடன், அத்தீர்மானங்கள் இறுதியானவையாக இருக்கும்.

7. எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டங்கள் பின்வருமாறு :

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| 1. கட்டுரையும் சுருக்கமும் | இவ்வினாப் பத்திரம் உள்நாட்டு ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் இடம்பெறும் முக்கியமான அரசியல், பொருளாதார, சமூக விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும் |
| 2. பொது உளச்சார்பு | இவ்வினாப் பத்திரம் விண்ணப்பதாரியின் மொழி, கணிதம், தர்க்கரீதியான சிந்தனை, முடிவெடுக்கும் தன்மை ஆகிய இயலுமைகளைப் பரீட்சிப்பதாக அமையும் |

8. **நேர்முகப் பரீட்சை.-** தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக மாத்திரம் பொதுவான நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அந்நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

**கவனிக்க வேண்டிய விடயம்.-** நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது நியமனம் பெறுவதற்குரிய தகுதியாகக் கருதப்பட மாட்டாது.

9. **பரீட்சைக் கட்டணம்.-** பரீட்சைக் கட்டணம் ரூ. 1,200 ஆகும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு முன்பாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன் கீழ், அரச இறைவரிக்குச் சேரத்தக்கதாக, நாடு பூராகவுமுள்ள தபால்/ உபதபால் அலுவலகங்களில் பணமாகச் செலுத்தி, விண்ணப்பதாரியின் பெயருக்குப் பெறப்படும் பற்றுச்சீட்டானது, விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் இலகுவில் அகன்று விடாதபடி ஒட்டப்பட வேண்டும். பரீட்சைக்கட்டணம் தொடர்பாக காசுக்கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், இந்தக் கட்டணம் எச்சந்தர்ப்பத்திலும் மீளச்செலுத்தப்படவும் மாட்டாது அல்லது வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவும் மாட்டாது. பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனமானது.

10. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவமானது இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்பதுடன், A4 அளவுத் தாளில், அதன் இருபக்கங்களையும் உபயோகித்து விடயங்கள் 01 முதல் 8.2 வரை தாளின் முன்பக்கத்திலும், விடயங்கள் 09 முதல் 14 வரை தாளின் மறுபக்கத்திலும், மிகுதி விடயங்கள் இன்னொரு தாளின் மூன்றாம் பக்கத்திலும் வரத்தக்கதாக தயாரிக்கப்பட வேண்டும். இதன்பிரகாரம் கணனிமூலம்/ தட்டச்சு மூலம் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட முடியும். ஆயினும் விண்ணப்பத்தில் நிரப்பப்படும் விடயங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் ஒத்திராத மற்றும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் புகைப்படப் பிரதியொன்றை வைத்திருத்தல் பிரயோசனமானது. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்துடன் ஒத்திசைவாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரி எந்த மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகிறாரோ, அந்த மொழியிலேயே விண்ணப்பம் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பமானது தமிழில் நிரப்பப்படும்பொழுது, அதன் தலைப்பில் பரீட்சையின் பெயர் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.

(இ) விண்ணப்பதாரியின் கையொப்பம் விண்ணப்பத்திலும், பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் உறுதிப் படுத்தப்பட வேண்டும். ஏதாவது நிறுவனமொன்றினூடாக விண்ணப்பிப்பவரது கையொப்பம் அந்நிறுவனத் தலைவராலோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவராலோ உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை அதிபர் ஒருவரால்/ ஓய்வுபெற்ற

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரால் / கிராம சேவை அலுவலரால் / சமாதான நீதிவான் ஒருவாரால் / சத்தியப்பிரமாண ஆணையாளரொருவரால் / வழக்கறிஞரொருவரால் / பிரசித்த நொத்தாரிசு ஒருவரால்/ முப்படைகளில் ஆணை வழங்கத்தக்க அதிகாரி ஒருவரால் / அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ரூ. 240,360 இற்குக் குறையாத வருடாந்த திரட்டிய சம்பளம் பெறும் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரால்/ ஒரு பௌத்த விகாரையின் பிரதம மதகுருவால் / மகாநாயக்க தேரர் ஒருவரால்/ வேறு மத வணக்க ஸ்தலமொன்றின் மதகுருவால் அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க மதப் பெரியாரால் சான்றுப்படுத்தப்படவேண்டும்.

(ஈ) குறைபாடுகள் எதுவுமின்றிப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் 2016.12.14 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குரிய ஆட்சேர்ப்புக்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சை - 2016" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். மேற்படி தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
நிறுவனங்கள் மற்றும் வெளிவாரிப்பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த.பெ. இல: 1503, கொழும்பு.

(உ) சகல விதங்களிலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற்போதல் அல்லது தாமதமாகக் கிடைத்தல் ஆகியன கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பதாரிகளுக்குரிய பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டமை பற்றி புதினப் பத்திரிகைகளில் அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்படும். அவ்வாறு அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களுள் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிட்டால், அவ்வறிவித்தலில் குறிப்பிடப்படும் விதத்தில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனங்களுக்கான மற்றும் வெளிவாரிப்பரீட்சைகள் கிளையுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். அந்த அறிவித்தலில் கேட்கப்படும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் ஏனைய தகவல்கள் ஆகியவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகள், தமக்குரிய அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை தொலைநகல்மூலம் பெற்றுக்கொள்வதற்காக ஒரு தொலைநகல் இலக்கத்தையும், உரிய தகவல்களுடன் அவ்வறிவித்தலில் தரப்படும் தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவது பயனுள்ளதாக அமையும். மேலும், அச்சந்தர்ப்பத்தில் பரீட்சைகள் திணைக்களத்தால் கேட்கப்படும் அவசியமான தகவல்களை உடனடியாக வழங்குவதற்காக, விண்ணப்பப்படிவம், பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச்சீட்டு, விண்ணப்பத்தை அனுப்பிய பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டு ஆகியவற்றின் பிரதிகளைத் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

11. பரீட்சைக்குத் தோற்றுதல் :

(அ) சகலவிதங்களிலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கே பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ்வாறான அனுமதிப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரி எவரும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமக்குரிய பரீட்சை மண்டபத்தில் தமக்குரிய சுட்டெண்ணுடன் பரீட்சை எழுதுதல் வேண்டும். அவர், உறுதிப்படுத்திய தமது கையொப்பத்துடன்கூடிய அனுமதிப்பத்திரத்தை பரீட்சைக்குத் தோற்றும் தினத்தன்று பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் விதிக்கப்படும் பரீட்சைகள் தொடர்பான விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டவராவார். அவர் அவற்றை மீறுவாராயின், பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் வழங்கப்படும் தண்டனைகளுக்கு உரியவராவார். பரீட்சையை நடாத்துவது மற்றும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது ஆகியன தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியின் தீர்மானங்களே இறுதியானவையாகும்.

(ஈ) பரீட்சைப் பெறுபேறுகள்.- ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்கும் குறையாது புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளது பெயர்கள்அடங்கிய பெறுபேற்று அட்டவணை அரசசேவைகள் ஆணைக்குழு செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறு அறிவிக்கப்படுவதுடன், www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்திலும் வெளியிடப்படும்.

**குறிப்பு**.- பரீட்சைக்கான அனுமதிப் பத்திரமொன்றை விண்ணப்பதாரி ஒருவருக்கு வழங்குதலானது மாத்திரம், அவ்விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைக் கொண்டுள்ளார் எனக் கருதுவதற்குப் போதுமானதாக மாட்டாது.

12. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சை தொடர்பாக, அப்பரீட்சையின் பிரதான மேற்பார்வையாளர் திருப்தியுறும்வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக, பின்வரும் ஆவணங்களில் ஓர் ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

13. **பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- விண்ணப்பதாரி ஒருவர் தகைமையற்றவர் என்பது தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரி ஒருவர் சமர்ப்பித்த எந்தவொரு பிழையான விடயமும் அவரால் தெரிந்துகொண்டே சமர்ப்பிக்கப்பட்டது, அல்லது தேவையான ஒரு விடயம் அவரால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டது என்பது தெரியவந்தால், அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

14. தொழில் அலுவலர் பதவிக்கான ஏதாவது வெற்றிடங்களை அல்லது வெற்றிடங்கள் முழுவதையும் நிரப்பாமல் விடுவதற்கும், இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்படாது விட்ட ஏதாவது விடயம் தொடர்பாக முடிவுகளை மேற்கொள்வதற்கும் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

15. இந்த அறிவித்தலானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டிருப்பினும், அவற்றிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுடையதாகும்.

அரசசேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

தொழில் ஆணையாளர் அதிபதி,
தொழில் திணைக்களம்.

தொழில் செயலகம்,
நாராஹென்பிட்ட,
கொழும்பு 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தமிழ் மொழியிலான திறந்த விசேட போட்டிப் பரீட்சை - 2016

Special Open Competitive Examination in Tamil Medium for Recruitment to the Post of Labour Officer – II in the Department of Labour for the vacancies existing in Northern & Eastern Province - 2016

1. மொழி -
பரீட்சைக்குத் தோற்றும் மொழி : தமிழ் - 3 ☐
(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

விண்ணப்பப்படிவம் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமே நிரப்பப்படுதல் வேண்டும்.

2. தனிப்பட்ட தகவல்கள் -

2.1 முதலெழுத்துகள் பின்னால் வரத்தக்கதாக, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக் களில்) :----.
(உ-ம் : SILVA A.N.S.P.T)

2.2 முழுப்பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :----.
2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. தேசிய அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4. பால் : (ஆண் - 0, பெண் - 1) ☐

(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

5. 5.1 நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :----.
(அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கே தபாலில் அனுப்பப்படும்)
5.2 நிரந்தர முகவரி (தமிழில்) :----.
5.3 உத்தியோகபூர்வ முகவரி (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :----.

6. விவாக அந்தஸ்து :
(விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2) ☐

(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

7. இனம் - (சிங்களவர் - 1, தமிழர் - 2, இந்தியத்தமிழர் - 3, முஸ்லிம் - 4, ஏனையவர் - 5) ☐

(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

8. 8.1 பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

8.2 2016.12.14 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

9. தொலைபேசி இல. ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

10. கல்வித் தகைமைகளும் அனுபவமும் :

10.1 பட்டம் :----.

10.2 பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.

10.3 தேர்ச்சி (விசேட வகுப்புகள் ஏதும்பெற்றிருப்பின், குறிப்பிடுக) :----.

10.4 பட்டம் பெற்ற திகதி :----.

10.5 பட்டம் பெற்ற மொழிமூலம் :----.

10.6 வழக்கறிஞராக உயர்நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

(உரியதாயின் மாத்திரம் குறிப்பிடுக)

11. நீர் ஏதாவது குற்றநடவடிக்கைகளுக்காக நீதிமன்றில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா ? :----.
ஆம் எனில், விபரம் தருக :----.

12. நீர் முன்னர் ஏதாவது அரசசேவையில் இருந்து அது முடிவுறுத்தப்பட்டதா ? :----.
ஆம் எனில், அது தொடர்பான விபரங்களும், உமது அச்சேவை முடிவுறுத்தப்பட்டதற்கான காரணமும் :----.

13. பரீட்சைக்கட்டணம் செலுத்துதல் :

13.1 செலுத்திய தொகை :----.

13.2 செலுத்திய மாவட்டம்/ பிரதேச செயலகம் :----.

13.3 செலுத்திய திகதி :----.

13.4 பற்றுச்சீட்டு இல. :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை இலகுவில் அகற்ற முடியாத வகையில் அதன் ஓர் ஓரத்தில் இங்கே ஒட்டுக (பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை வைத்திருத்தல் உபயோகமானது) |

14. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்ற ......................................... ஆம் இலக்க ............ .............................. ஆந் திகதிய பற்றுச்சீட்டை மேலே ஒட்டியுள்ளேன் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன். மேலும் பரீட்சை விதிமுறைகளுக்கு அமைவாக நடந்துகொள்வேன் எனவும், இந்தப் பரீட்சை தொடர்பான விதிமுறைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவர் எனத் தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின்போது அல்லது அதன் பின்னர் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்ற முடிவுக்கு நான் இணங்குகிறேன். மேலும், பரீட்சையை நடாத்துதல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் விதிமுறைகளுக்கு உட்படுவேன் எனப் பிரகடனம் செய்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் (வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆம் பந்தியின் (இ) பிரிவின்படி இருத்தல் வேண்டும்) -

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ........................................................................................ (விண்ணப்பதாரியின் முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும், தனது கையொப்பத்தை ........................................... ஆந் திகதியன்று என் முன்னிலையில் இட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரது முழுப்பெயர் :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்) :----.
பதவி :----.
திகதி :----.

16. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (அரச /மாகாணசபை /அரச கூட்டுத்தாபன சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு /திருமதி /செல்வி .................................................... என்பவர் இந்த அமைச்சில் /திணைக்களத்தில் /நிறுவனத்தில் ............................................................... என்னும் பதவியில் சேவை புரிகிறார் என்பதால், அவரது விண்ணப்பத்தைச் சிபார்சுசெய்து முன்னளிக்கிறேன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால், இந்நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
(உத்தியாகபூர்வ முத்திரை இடப்பட வேண்டும்) :----.
திகதி :----.

## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

### தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தமிழ் மொழியிலான மட்டுப்படுத்தப்பட்ட விசேட போட்டிப் பரீட்சை - 2016

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழுள்ள தொழில் திணைக்களத்தில் தொழில் அலுவலர் - II பதவிக்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள 12 தமிழ் மொழியிலான வெற்றிடங்களுக்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியுடனான ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழும், மற்றும் අමප / 16/ 0473/ 712/ 005 ஆம் இலக்க 2016.07.26 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் மூலமான அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரமும், மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. விண்ணப்பங்கோரும் இறுதித் தினத்தன்று, அதாவது 2016.12.14 ஆந் திகதியன்று இவ்வறிவித்தலின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் தரப்பட்டுள்ள தகுதிகளை முழுமையாகக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கொழும்பு நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் இப்பரீட்சை நடாத்தப்படும்.

1. **ஆட்சேர்க்கும் முறை.**- எழுத்துப் பரீட்சையொன்றில் பெறப்படும் திறமை அடிப்படையின் பிரகாரம் தகுதிகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையொன்றின் பின்னர், நியமனங்கள் வழங்கப்படும்.

2. **தகுதிகள்** :

2.1 கல்வித் தகைமைகள்/ தொழில் தகைமைகள்/ அனுபவம் :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல், அல்லது உயர்நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்துள்ள வழக்கறிஞராயிருத்தல் என்பதுடன், அரச/மாகாண அரசசேவையில் நிரந்தரமற்றும் ஓய்வூதியத்துடனான, MN - 1 - 2006 - A அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத்திட்டத்தையுடைய பதவியொன்றில் ஐந்து (5) வருடங்களுக்குக் குறையாத முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது,

(ஆ) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் தினத்தன்று அரச/ மாகாண அரசசேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடனான, MN - 1 - 2006 - A அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத்திட்டத்தையுடைய பதவியொன்றில் பத்து (10) வருடங்களுக்குக் குறையாத முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.

2.2 உடற்றகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை புரிவ தற்கும் பதவிக்குரிய உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உரிய உடல் ரீதியானதும் உளரீதியானதுமான தகைமைகளைக் கொண்டிருத்தல்

2.3 வேறு தகைமைகள் :

(I) தற்போது இருக்கும் பதவியில் நிரந்தரமாக இருத்தல்

(II) தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டிய தினத்தன்று முடிவடையும் ஐந்து (05) வருட காலப்பகுதியினுள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

(III) தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டிய தினத்தன்று முடிவடையும் ஐந்து (05) வருட காலப்பகுதியினுள் சகல சம்பள உயர்வுகளையும் உழைத்துப் பெற்றிருத்தல்

(IV) முடிவடைந்த ஐந்து வருட காலத்தினுள் எச்சரிக்கை தவிர்ந்த வேறு ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகாதிருத்தல்

(V) விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் தரப்பட்டுள்ள திகதியன்று பதவிக்குத் தேவையான எல்லாத் தகைமைகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல்

3. **வயதெல்லை.**- பொருத்தமற்றது.

4. **சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான நியதிகளும், சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானது.

(ii) இந்நியமனம் ஒரு வருடத்திற்கு பதில் கடமைக் காலத்தைக் கொண்டிருக்கும்.

(iii) நியமனத் திகதியிலிருந்து 03 வருட காலத்தினுள் ஆட்சேர்ப்பு விதிகளுக்கமைவாக முதலாவது வினைத்திறமை காண்தடையைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(iv) அரச நிருவாகச் சுற்றறிக்கை 01/ 2014 இற்கு அமைவாக மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் உத்தியோகபூர்வ மொழிகளுக்கான குறித்துரைக்கப்பட்ட தகைமைகளை நியமனத் திகதியிலிருந்து 05 வருட காலத்தினுள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(v) அரச சேவைக்கான நியமனங்களுக்குரிய பொதுவான நிபந்தனைகளுக்கு அமைவாகவும், அரசசேவைகள் ஆணைக்குழுவின் விதிகள், நிதிப்பிரமாணங்கள், தாபனக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அவற்றுக்குச் செய்யப்படும் திருத்தங்கள், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் ஆகியவற்றுக்கு அமைவாகவும், 2013.09.26 ஆந் திகதிய அரசசேவைகள் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளில் கூறப்பட்டுள்ள தரங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றுக்கும் அவற்றுக்கு எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கும் அமைவாகவும் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி தொழில் அலுவலர் தரம் II இற்கு நியமிக்கப்படுவார்.

(vi) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி பதவியேற்கும் தினத்திலிருந்து எட்டு (8) வருட காலத்திற்கு வடக்கு அல்லது கிழக்கு மாகாணத்தில் கட்டாயச் சேவைக் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

(vii) தமக்கு வழங்கப்படும் பதவியில் உரிய திகதியன்று கடமையைப் பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/ அல்லது நியமிக்கப்பட்ட பதவிக்குரிய கடமைகளை உரிய பிரதேசத்தில் பொறுப்பேற்பதை நிராகரிக்கும் விண்ணப்பதாரியின் நியமனத்தை இரத்துச்செய்வதற்குரிய அதிகாரம் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு உண்டு.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்கு ரூ. 34,605 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - ரூ. 63,460 என்னும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தானது. (2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கையின் MN - 05 – 2016 சம்பளப்பிரிவு - அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளக் கொடுப்பனவு இடம்பெறும்.)

6. **எழுத்துப் பரீட்சை.**- எழுத்துப் பரீட்சையின் வினாப் பத்திரங்கள் 02 இல் சித்தியடைதல் வேண்டும்.

| வினாப்பத்திரம் | காலம் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. தொழில்சட்டங்கள் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 02. விடயஆய்வு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

பரீட்சைகள் தமிழ் மொழி மூலத்தில் மாத்திரம் நடாத்தப்படும்.

விண்ணப்பதாரிகள் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் விடையளிக்க வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பொதுவானதொரு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவோரது எண்ணிக்கை, வெற்றிடங்கள் தொடர்பில் நியமிக்கப்படுவோரது எண்ணிக்கை மற்றும் நியமனம் வழங்கப்படும் திகதி ஆகியன தொழில் ஆணையாளர் அதிபதியால் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரிகளில் பலர் ஒரே அளவான மொத்தப் புள்ளிகளைப் பெறும் சந்தர்ப்பத்தில், அரச சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தொழில் ஆணையாளர் அதிபதியால் தீர்மானங்கள் எடுக்கப்படும் என்பதுடன், அத்தீர்மானங்கள் இறுதியானவையாக இருக்கும்.

7. எழுத்துப் பரீட்சை பின்வரும் விடயங்களில் நடாத்தப்படும் :

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| 1. தொழில் சட்டங்கள் | பின்வரும் தொழில் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு வினாப்பத்திரம் தயாரிக்கப்படும் :<br>(i) 1941 இன் 27 ஆம் இலக்க சம்பளச்சபைகள் கட்டளைச்சட்டம்<br>(ii) 1954 இன் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் (சேவை மற்றும் ஊதியங்களை ஒழுங்கமைத்தல்) சட்டம்<br>(iii) 1950 இன் 43 ஆம் இலக்க கைத்தொழில்பிணக்குகள் சட்டம்<br>(iv) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர்சேமலாபநிதிச் சட்டம்<br>(v) 1971 இன் 45 ஆம் இலக்க சேவையாளர்களின் சேவையை முடிவுறுத்தல் (விசேடஏற்பாடுகள்) சட்டம்<br>(vi) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம்<br>(vii) 1935 இன் 14 ஆம் இலக்க தொழிற்சங்கக் கட்டளைச்சட்டம்<br>(viii) 1956 இன் 47 ஆம் இலக்க பெண்கள், இளையோர் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பான சட்டம்<br>(ix) 1939 இன் 32 ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டம்<br>(x) 1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம் |
| 2. விடய ஆய்வு | பரீட்சார்த்திகளின் ஆக்கத்திறன் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் ஆகியவற்றைச் சோதிப்பதற்காக இவ்வினாத்தாள் தயாரிக்கப்படும். இந்நோக்கத்திற்காக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சம்பவங்கள் இணைந்ததான பிரச்சினைகள் தரப்பட்டு அவற்றிலிருந்தான வினாக்களுக்கு விடை கோரப்படும். |

8. **நேர்முகப் பரீட்சை.-** தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக மாத்திரம் பொதுவான நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அந்நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

**கவனிக்க வேண்டிய விடயம்.-** நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது நியமனம் பெறுவதற்குரிய தகுதியாகக் கருதப்பட மாட்டாது.

9. **பரீட்சைக் கட்டணம்.-** பரீட்சைக் கட்டணம் ரூ. 1,200 ஆகும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு முன்பாக, பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியுடைய வருமானத்தலைப்பு 2003-02-13 இன் கீழ், அரச இறைவரிக்குச் சேரத்தக்கதாக, நாடு பூராகவுமுள்ள தபால்/ உபதபால் அலுவலகங்களில் பணமாகச் செலுத்தி, விண்ணப்பதாரியின் பெயருக்குப் பெறப்படும் பற்றுச்சீட்டானது, விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் இலகுவில் அகன்று விடாதபடி ஒட்டப்பட வேண்டும். பரீட்சைக்கட்டணம் தொடர்பாக காசுக்கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், இந்தக் கட்டணம் எச்சந்தர்ப்பத்திலும் மீளச்செலுத்தப்படவும் மாட்டாது அல்லது வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவும் மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனமானது.

10. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவமானது இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்பதுடன், A4 அளவுத் தாளில், அதன் இருபக்கங்களையும் உபயோகித்து விடயங்கள் 01 முதல் 8.2 வரை தாளின் முன்பக்கத்திலும், விடயங்கள் 09 முதல் 13.10 வரை இரண்டாம் பக்கத்திலும், 13.11 முதல் 15 வரை மூன்றாம் பக்கத்திலும், மிகுதியானவை நான்காம் பக்கத்திலும் வரத்தக்கதாக விண்ணப்பதாரியால் தயாரிக்கப்பட வேண்டும். இதன்பிரகாரம் கணினிமூலம்/ தட்டச்சு மூலம் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட முடியும். ஆயினும் விண்ணப்பத்தில் நிரப்பப்படும் விடயங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் ஒத்திராத மற்றும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருத்தல் பிரயோசனமானது. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்துடன் ஒத்திசைவாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரி எந்த மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகிறாரோ, அந்த மொழியிலேயே விண்ணப்பம் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பமானது தமிழில் நிரப்பப்படும்பொழுது, அதன் தலைப்பில் பரீட்சையின் பெயர் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(இ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது உள்ள, விண்ணப்பதாரியின் பதவி மற்றும் சேவை நிலையம் ஆகியன பரீட்சை தொடர்பான எல்லா விடயங்களிலும் தொடர்புடையது என்பதால், விண்ணப்பித்த பின்பு அது தொடர்பாக ஏற்படும் எந்தவொரு மாற்றமும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை திணைக்களத்தலைவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலரால் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

(உ) குறைபாடுகள் எதுவுமின்றிப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் 2016.12.14 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் "தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குரிய ஆட்சேர்ப்புக்கான விசேட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2016" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். மேற்படி தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
நிறுவனங்களுக்கான மற்றும் வெளிவாரிப்பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த.பெ. இல: 1503, கொழும்பு.

(ஊ) சகல விதங்களிலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற்போதல் அல்லது தாமதமாகக் கிடைத்தல் ஆகியன கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

11. விண்ணப்பதாரிகளுக்குரிய பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டமை பற்றி புதினப் பத்திரிகைகளில் அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்படும். அவ்வாறு அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களுள் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிட்டால், அவ்வறிவித்தலில் குறிப்பிடப்படும் விதத்தில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனங்களுக்கான மற்றும் வெளிவாரிப்பரீட்சைகள் கிளையுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். அந்த அறிவித்தலில் கேட்கப்படும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் ஏனைய தகவல்கள் ஆகியவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகள், தமக்குரிய அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை தொலைநகல்மூலம் பெற்றுக்கொள்வதற்காக ஒரு தொலைநகல் இலக்கத்தையும், உரிய தகவல்களுடன் அவ்வறிவித்தலில் தரப்படும் தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவது பயனுள்ளதாக அமையும். மேலும், அச்சந்தர்ப்பத்தில் பரீட்சைகள் திணைக்களத்தால் கேட்கப்படும் அவசியமான தகவல்களை உடனடியாக வழங்குவதற்காக, விண்ணப்பப்படிவம், பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச்சீட்டு, விண்ணப்பத்தை அனுப்பிய பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டு ஆகியவற்றின் பிரதிகளைத் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

12. பரீட்சைக்குத் தோற்றுதல் :

(அ) சகலவிதங்களிலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கே பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ்வாறான அனுமதிப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரி எவரும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமக்குரிய பரீட்சை மண்டபத்தில் தமக்குரிய சுட்டெண்ணுடன் பரீட்சை எழுதுதல் வேண்டும். அவர், உறுதிப்படுத்திய தமது கையொப்பத்துடன்கூடிய அனுமதிப்பத்திரத்தை பரீட்சைக்குத் தோற்றும் தினத்தன்று பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் விதிக்கப்படும் பரீட்சைகள் தொடர்பான விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டவராவார். அவர் அவற்றை மீறுவாராயின், பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் வழங்கப்படும் தண்டனைகளுக்கு உரியவராவார். பரீட்சையை நடாத்துவது மற்றும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது ஆகியன தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியின் தீர்மானங்களே இறுதியானவையாகும்.

(ஈ) பரீட்சைப் பெறுபேறுகள்.- எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்கும் குறையாது புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளது பெயர்கள்அடங்கிய பெறுபேற்று அட்டவணை அரசசேவைகள் ஆணைக்குழு செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறு அறிவிக்கப்படுவதுடன், www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்திலும் வெளியிடப்படும்.

**குறிப்பு**.- பரீட்சைக்கான அனுமதிப் பத்திரமொன்றை விண்ணப்பதாரி ஒருவருக்கு வழங்குதலானது மாத்திரம், அவ்விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைக் கொண்டுள்ளார் எனக் கருதுவதற்குப் போதுமானதாக மாட்டாது.

13. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சை தொடர்பாக, அப்பரீட்சையின் பிரதான மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக, பின்வரும் ஆவணங்களில் ஓர் ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

14. **பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- விண்ணப்பதாரி ஒருவர் தகைமையற்றவர் என்பது தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரி ஒருவர் சமர்ப்பித்த எந்தவொரு பிழையான விடயமும் அவரால் தெரிந்துகொண்டே சமர்ப்பிக்கப்பட்டது, அல்லது தேவையான ஒரு விடயம் அவரால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டது என்பது தெரியவந்தால், அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

15. தொழில் அலுவலர் பதவிக்கான ஏதாவது வெற்றிடங்களை அல்லது வெற்றிடங்கள் முழுவதையும் நிரப்பாமல் விடுவதற்கும், இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்படாது விட்ட ஏதாவது விடயம் தொடர்பாக முடிவுகளை மேற்கொள்வதற்கும் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

16. இந்த அறிவித்தலானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டிருப்பினும், அவற்றிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுடையதாகும்.

அரசசேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

தொழில் ஆணையாளர் அதிபதி,
தொழில் திணைக்களம்.

தொழில் செயலகம்,
நாராஹென்பிட்ட,
கொழும்பு 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தமிழ் மொழியிலான மட்டுப்படுத்தப்பட்ட விசேட போட்டிப் பரீட்சை -2016

Special Limited Competitive Examination in Tamil medium for Recruitment to the Post of Labour Officer – II in the Department of Labour for the vacancies Exiting in Nothern and Eastern provinces - 2016

1. மொழி -
பரீட்சைக்குத் தோற்றும் மொழி : தமிழ் - 3

(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

விண்ணப்பப்படிவம் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமே நிரப்பப்படுதல் வேண்டும்.

2. தனிப்பட்ட தகவல்கள் -

2.1 முதலெழுத்துக்கள் பின்னால் வரத்தக்கதாக, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக் களில்) :----.
(உ-ம் : SILVA A.B.D.P.A)

2.2 முழுப்பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. தேசிய அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

4. பால் : (ஆண் - 0, பெண் - 1) | |

(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

5. 5.1 அலுவலக முகவரி (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :----.
(அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கே தபாலில் அனுப்பப்படும்)

5.2 அலுவலக முகவரி (தமிழில்) :----.

5.3 தனிப்பட்ட முகவரி (தமிழில்) :----.

6. விவாக அந்தஸ்து :
(விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2) | |

(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

7. இனம் - (சிங்களவர் - 1, தமிழர் - 2, இந்தியத்தமிழர் - 3, முஸ்லிம் - 4, ஏனையவர் - 5) | |

(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதுக)

8. 8.1 பிறந்த திகதி :

வருடம் | | | | | மாதம் | | | திகதி | | |

8.2 2016.12.14 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

9. தொலைபேசி இல. | | | | | | | | | | |

10. நீர் 2016.12.14 ஆந் திகதியன்று சேவையில் சேர்ந்த பதவிக்கு / சேவைக்கு / தரத்திற்கு உள்ளீர்க்கப்படுவதற்காக தகைமையைப் பெற்றுக்கொண்ட பரீட்சை/ நேர்முகப் பரீட்சை சித்தியடைந்த மொழிமூலத்தைக் குறிப்பிடுக :----.

11. 2016.12.14 ஆந் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலின் II ஆம் பகுதியின் பிரகாரம் சகல தகைமைகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளனவா ? :----.

12. கல்வித் தகைமைகளும் அனுபவமும் :

12.1 பட்டம் :----.

12.2 பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.

12.3 தேர்ச்சி (விசேட வகுப்புகள் ஏதும்பெற்றிருப்பின், குறிப்பிடுக) :----.

12.4 பட்டம் பெற்ற திகதி :----.

12.5 பட்டம் பெற்ற மொழிமூலம் :----.

12.6 வழக்கறிஞராக உயர்நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

(உரியதாயின் மாத்திரம் குறிப்பிடுக)

13. அனுபவம் :----.

13.1 பரீட்சைக்குத் தகைமை பெறுவதற்கான சேவையை/ தரத்தை (வகுப்பு, தரம் அல்லது பிரிவு ஏதும் இருப்பின்) குறிப்பிடுக :----.

13.2 தற்போது வகிக்கும் பதவி :----.

13.3 அப்பதவி அரச சேவைக்குரியதா அல்லது மாகாண அரச சேவைக்குரியதா ? :----.

13.4 தரம் :----.

13.5 வகுப்பு / பிரிவு :----.

13.6 பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

13.7 அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.

13.8 சம்பளப் பிரிவின் இலக்கம் :----.

13.9 சம்பள அளவுத்திட்டம் :----.

13.10 விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெற்றமைக்கு பல சேவைகள் இருக்குமாயின், அவ்வாறான தரங்களும் திருப்திகரமான சேவைக்காலங்களும் பற்றி பின்வரும் அட்டவணையில் குறிப்பிடுக :

| சேவையின்/ தரத்தின் பெயர் | உரிய அரச நிருவாகச் சுற்றறிக்கையின்படி சம்பளப் பிரிவின் இல. (உதா : MN-1-2006-A) | நியமனத் திகதி | நிரந்தரமாக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| (1) ………………… | ………………… | ………………… | ………………… |
| (2) ………………… | ………………… | ………………… | ………………… |
| (3) ………………… | ………………… | ………………… | ………………… |
| (4) ………………… | ………………… | ………………… | ………………… |

13.11 வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பகுதியின் நிபந்தனைகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட பதவியில் 2016.12.14 ஆந் திகதியன்று முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலம் :----.

14. பரீட்சைக்கட்டணம் செலுத்துதல் :

14.1 செலுத்திய தொகை :----.

14.2 செலுத்திய தபால் / உபதபால் அலுவலகம் :----.

14.3 செலுத்திய திகதி :----.

14.4 பற்றுச்சீட்டு இல. :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை இலகுவில் அகற்ற முடியாத வகையில் அதன் ஓரத்தில் இங்கே ஒட்டுக.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருத்தல் உபயோகமானது) |

15. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

2016.12.14 ஆந் திகதியில் முடிவுற்ற ஐந்து வருட காலப்பகுதியினுள் எல்லாச் சம்பள உயர்வுகளையும் உழைத்துப் பெற்றுள்ளேன் எனவும், வர்த்தமானி அறிவித்தலின் 2.1 ஆம் பகுதியின் பிரகாரம் 2016.12.14 ஆந் திகதியில் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவையைக் கொண்டுள்ளேன் எனவும், (எச்சரிக்கை தவிர்ந்த) வேறு ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகாதுள்ளேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

நான், வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி இந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான தகைமைகளைக் கொண்டுள்ளேன் எனவும், விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணத்திற்கான ............................ ஆம் இலக்க ............................ ஆந் திகதிய பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன். பரீட்சைக்கான ஒழுங்குவிதிகளுக்கு இயைந்து நடப்பேன் எனவும், இப்பரீட்சைக்கான நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவராக இருந்தால், பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது விண்ணப்பம் செல்லுபடியற்றதாகும் என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். மேலும், பரீட்சைகளை நடாத்துவது தொடர்பான பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியின் ஒழுங்குவிதிகள் யாவற்றுக்கும் இணங்கியொழுகச் சம்மதிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (வர்த்தமானி அறிவித்தலின் பிரிவு 10(ஈ) இன் பிரகாரம்)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .................................................................................. (விண்ணப்பதாரியின் முழுப்பெயர்) என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும், .................................... ஆந் திகதியன்று தனது கையொப்பத்தை என்முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரது முழுப்பெயர் :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்) :----.
பதவி :----.
திகதி :----.

17. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (விண்ணப்பதாரியின் பெயர்வழிக் கோவையின் பிரகாரம்) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ..................................................................
என்பவர் மத்திய அரச/மாகாண அரச ..............................................................................
என்னும் அமைச்சின்/ திணைக்களத்தின் ........................................................................
என்னும் பதவியில் சேவை புரிகிறார் எனவும், 2016.12.14 ஆந் திகதியன்று முடிவடைந்த ஐந்து வருட காலத்தினுள் அவரது சம்பள உயர்வுகளை உழைத்துப் பெற்றுள்ளார் எனவும், வர்த்தமானி அறிவித்தலின் 2.1 ஆம் பகுதியின் பிரகாரம் ................. வருடங்கள் (ஐந்து/ பத்து) முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும், உரிய வர்த்தமானி அறிவித்தலின்படி உரிய ஒழுங்குவிதிகளுக்கமைவாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளார் எனவும், எனது முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் தமது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன். அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால், தற்போதைய சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது.

----,
திணைக்களத் தலைவரின்/ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
(உத்தியாகபூர்வ முத்திரை இடப்பட வேண்டும்) :----.
திகதி :----.

11-857/ 4

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

வளிமண்டலவியல் திணைக்களம்

## இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் எந்திரவியலாளர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிடம் காணப்படும் இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் எந்திரவியலாளர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக நடத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமை பெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 ***பதவிப் பெயர்.***- தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் எந்திரவியலாளர்

1.2 ***பதவிக்கான கடமைகள் :***

* அனைத்து மின்சார மற்றும் ரேடார் உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ;
* கணினி முறைமை, இணையத்தளத்தை திருத்துதல் ;
* திணைக்களத் தலைவரினால் ஒப்படைக்கப்படும் ஏனைய பணிகள்.

2. நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனங்கள் அமுலுக்கு வரும் திகதி ஆகியன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையுமோ அல்லது குறிப்பிட்ட ஒரு எண்ணிக்கையினையோ நிரப்பாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உள்ளது.

3. **சம்பளம் :**

**அட்டவணை இல. 1**

| தரம் | சம்பள அளவுத் திட்டம் | ஆரம்ப மாதாந்தச் சம்பளம் |
|---|---|---|
| தரம் III | மாதாந்தம் ரூபா 31,040 - 10 X 445 - 11 X 660 - 10 X 730 - 10 X 750 - ரூபா 57,550 (MN3-2016) | ரூபா 18,212 (பொ. நி. சு. 03/ 2016 இல் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக) |
| தரம் II | மாதாந்தம் ரூபா 31,040 - 10 X 445 - 11 X 660 - 10 X 730 - 10 X 750 - ரூபா 57,550 (12 ஆவது சம்பள நிலையில் ஆரம்பமாகும்.) (MN3-2016) | ரூபா 21,218 (பொ. நி. சு. 03/ 2016 இல் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக) |
| தரம் I | மாதாந்தம் ரூபா 31,040 - 10 X 445 - 11 X 660 - 10 X 730 - 10 X 750 - ரூபா 57,550 (23 ஆவது சம்பள நிலையில் ஆரம்பமாகும்.) (MN3-2016) | ரூபா 25,532 (பொ. நி. சு. 03/ 2016 இல் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக) |

4. **நியமனத்துக்கான நிபந்தனைகள் :**

4.1 அரச நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்துடைய பதிவுகள் சமமாக ஒரு சதவீதம் மூலம் சரி செய்யப்படும் என்று, விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு அவரது சம்பளம் தொழில்நுட்ப பங்களிப்புச் செலுத்த அவர்களின் சம்பளப் பொறுப்பை எடுத்துக்கொள்ள மாநில அதிகாரிகள் நியமிக்கப்படுவர். இந்த நியமனம் 3 வருட அமைய சேவைக்காலத்துக்கு உட்படுவதுடன், இந்த வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் காணப்படும் அரசாங்க சேவை நியமனங்களுடன் ஏற்புடையதாகும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கைத் தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்புக்கும் இதில் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயல் நடைமுறை விதிகள், தாபனக்கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் அரசாங்கத்தினால் அரசாங்க சேவை தொடர்பில் வெளியிட்டுள்ள மற்றும் வெளியிடும் ஏனைய கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்படுபவர் கட்டுப்பட்டவராவார் ;

*4.2 அரச கரும மொழி அல்லாத மொழி மூலம் ஆட்சேர்க்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்ட திகதி முதல் 3 வருட காலப்பகுதியினுள் அரச கரும மொழியில் சித்தியெய்துதல் வேண்டும். உரிய காலப்பகுதியினுள் குறித்த பரீட்சையில் சித்தியெய்தாமை அடுத்த சம்பள ஏற்றம் ஒத்திவைக்கப்படுவதற்கு காரணமாக அமையும் ;*

*4.3 நிரந்தர நியமனத் திகதியிலிருந்து 5 வருட காலப்பகுதியினுள் பொது நிருவாகச் சுற்றறிக்கை 1/ 2014 இல் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் தமது பதவிக்கு ஏற்புடையதாகும் மட்டத்திலான இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும். உரிய காலப்பகுதியினுள் குறித்த தேர்ச்சியைப் பெறத்தவறும் பட்சத்தில் குறித்த தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் வரை சம்பள ஏற்றங்கள் நிறுத்தப்படும் ;*

*4.4 கடமை நேரங்கள் எப்பொழுதும் பொதுவான அலுவலக நேரங்களாக அமையாது. இரவு பகல் இரண்டிலும் சனி, ஞாயிறு மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களிலும் அமையக்கூடும். சேவை மாற்று முறையின் அடிப்படையிலும் கடமையில் ஈடுபட நேரிடும் ;*

*4.5 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.*

5. ***தகைமைகள்*** :

5.1 ***அடிப்படைத் தகைமைகள் :***

*(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;*

*(ஆ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கான ஆகக்குறைந்த வயது 18 வருடங்கள் என்பதுடன், ஆகக்கூடிய வயது 30 வருடங்களாகும்.*

*(இதற்கமைய 1998.12.14 ஆந் திகதி அல்லது இதற்கு முன்னர் மற்றும் 1986.12.14 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரான திகதியில் பிறந்தவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைக் கொண்டுள்ளனர்.)*

5.2 ***கல்வித் தகைமைகள் :***

*(அ) சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் மற்றுமொரு பாடத்துக்கு க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் 6 பாடங்களில் திறமைச் சித்தியெய்துதல் ;*

*மற்றும்*

*(ஆ) 3 பாடங்களில் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியெய்துதல். பாடங்களின் ஒருங்கிணைப்பானது கீழே காட்டப்பட்டுள்ளவற்றில் ஒன்றாக அமைதல் வேண்டும் :*

*(1) பௌதீகவியல், தூயகணிதம் மற்றும் பிரயோக கணிதம் ;*

*(2) பௌதீகவியலுடன்,*

(i) *தூயகணிதம்/பிரயோக கணிதம்/இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்று ;*

*மற்றும்*

(ii) *இரசாயனவியல்/ விவசாயம்/ தகவல் தொழில்நுட்பம்/ கணினியியல் ஆகிய பாடங்களில் ஒன்று.*

5.3 ***இலகு மின்சாரம் அல்லது இலகு மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு பாடத்துறைக்கான தொழில் தகைமைகள் :***

(i) *தொழில் துறைக்கான தேசிய தொழில் ஆற்றல்கள்* (NVQ) *6 நிலையில் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் ;*

*அல்லது*

(ii) மொறட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(iii) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(iv) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(v) திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(vi) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் முதல் பகுதியை சிறப்பாகப் பூர்த்திசெய்தல் ;

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடம் விசாரித்து, கருத்துக்களைக் கேட்டறிந்ததன் பின்னர், மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லாவிதத்திலும் ஒப்பானதென மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

5.4 ***உடற்தகைமைகள்.***- அனைத்து விண்ணப்பதாரர்களும் நாட்டின் எந்தவோர் பகுதியிலும் சேவையிலீடுபடக்கூடியவாறு உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தகைமையுடையவராக காணப்படுதல் வேண்டும். ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் நடத்தப்படும் மருத்துவப் பரிசோதனையில் பொருத்தமற்றவர் என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் பதவிக்குப் பொருத்தமற்றவராகக் கருதப்படுவார்.

**குறிப்பு.**- சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்கான தகைமைகளை விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியில் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6. **பரீட்சை நடைமுறைகள்.**- பரீட்சையானது இரண்டு பாடங்களை உள்ளடக்கியதான ஓர் எழுத்துப் பரீட்சையாகும். இப்பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் இடம்பெறுவதுடன், விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| | பெற்றுக்கொள்ளக் கூடிய மொத்தப் புள்ளிகள் | சித்திபெறுவதற்கான ஆகக் குறைந்த புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| (i) பொது அறிவு | 100 | 40% | 1 மணித்தியாலம் |
| (ii) பாட விடயத்துடன் தொடர்புபட்ட தொழில்நுட்ப வினாப்பத்திரம் | 100 | 40% | 2 மணித்தியாலம் |

7. **பாடத்திட்டம்** :

(i) *பொது அறிவு.*- இவ்வினாத்தாளானது பரீட்சார்த்தியின் தர்க்க ஆற்றல், பகுப்பாய்வுத் திறன், தீர்மானிக்கும் ஆற்றல் ஆகியவற்றை அளவீடு செய்வதற்கான பல்தேர்வு மற்றும் சுருக்க விடைக்கான 50 கேள்விகளைக் கொண்டுள்ள ஒரு வினாத்தாளாகக் காணப்படுவதுடன், சகல கேள்விகளுக்கும் விடை அளித்தல் கட்டாயமானதாகும் ;

(ii) *பாட விடயத்துடன் தொடர்புபட்ட தொழில்நுட்ப வினாப்பத்திரம்.-* பௌதீக விஞ்ஞானம் மற்றும் இலத்திரனியல் விஞ்ஞான பாடங்களுடன் தொடர்புபட்ட க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை மட்டம் மற்றும் அதுவரையிலான இயந்திரவியல் விஞ்ஞானம், அலகு மற்றும் பரிமாணம், திரவத்தன்மை, அதிர்வு மற்றும் அலைவரிசை, வெப்பமடைதல் மற்றும் மின்சாரம், மின்சாரக் கோட்பாடுகள், பகுதிக் கடத்தி, டிஜிடல் தொழில்நுட்பம், பல்வேறுபட்ட தொடர்பாடல் மற்றும் தரவுப் பரிமாற்ற முறைகள் ஆகிய விடயசார் அறிவினைத் தீர்மானிக்கும் வினாக்களைக் கொண்டுள்ளதுடன், சகல வினாக்களுக்கும் விடை அளித்தல் கட்டாயமானதாகும்.

8. **தெரிவு நடைமுறை :**

8.1 எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களுள், நிரப்புவதற்கு எதிர்பார்க்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையான விண்ணப்பதாரர்கள் பெறுபேறுகளின் ஆற்றல் ஒழுங்கு வரிசைக்கு அமைய ஆட்சேர்க்கப்படுவார்கள். (நேர்முகப் பரீட்சையில் அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்த முடியாத விண்ணப்பதாரர்கள் பரீட்சையில் உரிய ஆற்றல் மட்டத்தை அடைந்திருந்தபோதிலும் ஆட்சேர்க்கப்பட மாட்டார்கள்.)

8.2 வர்த்தமானி அறிவித்தலின் 6 ஆம் பந்தியின் பிரகாரம், எழுத்துமூலப் பரீட்சையில் தோற்றி சித்தியெய்திய பரீட்சார்த்திகளின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேறுகளைக் கொண்ட ஆவணம் வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்தக்கு வழங்கப்படும். பரீட்சையில் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் பிரத்தியேகமாக அறிவிக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

9. **விண்ணப்பப்படிவங்களைத் தயார் செய்தல் :**

9.1 விண்ணப்பப்படிவங்கள் தாம் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் தயார் செய்யப்படுதல் வேண்டும்.

9.2 சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களில் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் குறித்த மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

9.3 இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் 21 x 29 செ.மீ. (ஏ4) அளவிலான காகிதத்தாளின் இரண்டு பக்கத்தையும் பயன்படுத்தி விண்ணப்பதாரியே விண்ணப்பப்படிவத்தை தயார் செய்தல் வேண்டும். இலக்கம் 1 முதல் 7 வரையிலான தலைப்புக்கள் 1 ஆவது பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 11.1 வரையிலான தலைப்புக்கள் 2 ஆவது பக்கத்திலும், இலக்கம் 12 முதல் 16 வரையிலான தலைப்புக்கள் 3 ஆவது பக்கத்திலும், 17 ஆவது இலக்க தலைப்பு 4 ஆவது பக்கத்திலும் உள்ளடங்கும் விதத்தில் விண்ணப்பப்படிவத்தை தயார் செய்தல் வேண்டும்.

10. **விண்ணப்பப்படிவங்களை நிரப்புதல் :**

10.1 விண்ணப்பதாரியின் கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

10.2 தாம் தோற்றும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கான அனுமதியின்மையால் பிழையின்றி நிரப்புதல் வேண்டும்.

10.3 பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்தி இதற்கான பற்றுச்சீட்டை அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டுதல் வேண்டும்.

10.4 விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். யாதேனும் நிறுவனமொன்றிலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவர் மூலமும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையின் தலைவர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிஸ், முப்படையில் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், ரூபா 2,40,360 அல்லது அதற்கு அதிகமான வருடாந்த ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் அல்லது நிரந்தர பதவிநிலைத் தரத்திலான உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

10.5 உண்மைக்குப் புறம்பான தரவுகளை வழங்குதல்.- இந்த பரீட்சையில் தோற்றுவதற்காக விண்ணப்பதாரிக்கு யாதேனும் தகைமை இல்லையென்பது அறியவரும் பட்சத்தில் அல்லது முன்வைக்கப்பட்டுள்ள யாதேனும் தகவல் உண்மைக்குப் புறம்பானதென அறிந்திருந்தும் முன்வைக்கப்பட்டுள்ள பட்சத்தில் அல்லது யாதேனும் முக்கிய விடயம் தேவையென்றே மறைக்கப்பட்டுள்ளதாக தெரியவரும் பட்சத்தில் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சைக்கு பின்னர் அல்லது அவருடைய பரீட்சார்த்தி தகைமையை இரத்துச் செய்வதற்கும், சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் சேவையிலிருந்து நீக்குவதற்கும் வாய்ப்புள்ளது.

11. **விண்ணப்பப்படிவங்களை முன்வைத்தல் :**

11.1 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2016.12.14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே காட்டப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

11.2 விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்தல் :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

11.3 தற்போது அரசாங்க/ மாகாண அரச சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும் அரசாங்க கூட்டுத்தாபனம், உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத் தலைவரின் ஊடாகவும் குறிப்பிட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

11.4 விண்ணப்பப்படிவத்தை தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் தொலைத்தொடர்பு மற்றும் ராடர் எந்திரவியலாளர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்த்தல் - வளிமண்டலவியல் திணைக்களம்" என தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

11.5 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினதும் பணம் செலுத்திய பற்றுச் சீட்டினதும் பிரதிகளை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

12. **விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்றலும் அனுமதிப் பத்திரங்களை வழங்குதலும் :**

12.1 உரிய மாதிரிப் படிவத்துடன் ஒத்திராத, உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத, பூர்த்தியடையாத நிலையில் காணப்படும் விண்ணப்பப்படிவங்கள் எந்தவிதமான முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய விதத்தில் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரிகள் ஏற்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியை தம் வசம் வைத்திருப்பது நன்மை பயக்கும். பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்படும் விண்ணப்பப்படிவத்துக்கு ஒப்பானதா என்பது குறித்து விண்ணப்பதாரர் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். இன்றேல், விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படலாம்.

12.2 விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் காணாமற்போகும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் எந்தவிதமான முறைப்பாடும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

12.3 இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படும் வயது எல்லைக்கு உட்படும், விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் அல்லது அத்திகதிக்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி, அதற்கான பற்றுச் சீட்டுடன் சரியான விதத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதிப் பத்திரங்களை அனுப்பி வைப்பார். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கான அனுமதிப் பத்திரமொன்றை வழங்குதலானது, விண்ணப்பதாரர் இந்த பரீட்சையில் தோற்றுவதற்கு அல்லது இந்த பதவிக்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றாக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து, வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார்களா என பரிசீலிக்கையில் தேவையான தகைமைகள் காணப்படவில்லை என அறியவரும் பட்சத்தில் அவர்களது பரீட்சைக்கான பரீட்சார்த்தி தகைமை இரத்துச் செய்யப்படும்.

12.4 விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்கியவுடனேயே அது குறித்து குறிப்பிட்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகையில் அறிவித்தல் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த நிலையில் அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப்பெறாவிட்டால் அது குறித்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். தங்களிடம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பப்படிவத்தை தபால் செய்கையில் பதிவு செய்த பற்றுச் சீட்டு ஆகியவற்றுடன் தங்களது முழுப் பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்திடம் வினவுதல் உகந்தது. நீங்கள் கொழும்புக்கு வெளியில் வசிக்கும் ஒரு விண்ணப்பதாரியெனில், மேற்குறிப்பிட்ட விபரங்களுடன் பெக்ஸ் மூலம் அனுமதிப்பத்திரத்தின் பிரதியை பெற்றுக்கொள்ளும் நோக்கில் தங்களது பெக்ஸ் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதத்தை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு பெக்ஸ் மூலம் அனுப்பி வைத்து வினவுதல் உகந்தது.

13. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 750 ரூபாவாகும். குறித்த கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன் கீழ் அரச வருமானத்தில் வரவு வைக்கப்படும் விதத்தில் நாட்டில் உள்ள எந்தவொரு தபால் / உப தபால் அலுவலகத்திலும் பண வடிவில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை அதனொரு விளிம்பில் விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழறாத வண்ணம் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்பதுடன், பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட பணமானது எக்காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்படவோ வேறு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது நன்மை பயக்கும்.

14. **பரீட்சைக்குத் தோற்றுதல்** :

14.1 இப்பரீட்சையானது 2017, பெப்புருவரி மாதம் கொழும்பில் பரீட்சைகள் திணைக்களத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலங்களில் நடைபெறும்.

14.2 பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்றுவதற்கு முன்னர் அனுமதிப் பத்திரத்தில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். பரீட்சை நிலையத்தில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை பரீட்சை நிலைய அதிபருக்கு முன்வைக்க வேண்டுமென்பதுடன், அவ்வாறின்றேல் பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. மேலும், பரீட்சார்த்தி தமக்கு நிச்சயிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

14.3 பரீட்சையை நடத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவார்கள். குறித்த சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட்டவராவார்.

15. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்**.- பரீட்சை நிலையத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் பரீட்சை நிலைய அதிபர் திருப்திப்படும் வகையில் விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

16. இங்கு குறிப்பிடப்படாத விடயங்கள் ஏதும் இருப்பின் அது தொடர்பில் வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகம் தீர்மானம் மேற்கொள்வார். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கு பிணைக்கப்பட்டுள்ளார்கள்.

17. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலின் மொழிகளுக்கு இடையில் யாதேனும் பொருத்தமற்ற தன்மை அல்லது ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

லலித் சந்ரபால,
வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகம்,
வளிமண்டலவியல் திணைக்களம்.

வளிமண்டலவியல் திணைக்களம்,
பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07,
2016, நவெம்பர் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

வளிமண்டலவியல் திணைக்களம்

இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் எந்திரவியலாளர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

Open Competitive Examination for Recruitment to the post of Tele Communication and Radar Technical Officers (Grade III) of the Sri Lanka Technological Service - 2016

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3

(கூட்டினுள் உரிய இலக்கத்தை குறிப்பிடவும்)

1. (அ) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ஆ) இறுதிப் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியாகவும் அமையும் விதத்தில் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
உதாரணம் : (GUNAWARDHANA, H.M.S.K)

(இ) முழுப் பெயர் (சிங்களம் / தமிழ்) :----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

3. பால் நிலை : ஆண்-0 பெண் -1

(கூட்டினுள் உரிய இலக்கத்தை குறிப்பிடுக)

4. நிரந்தர முகவரி :

(அ) சிங்களம் / தமிழ் :----.

(ஆ) ஆங்கிலத்தில் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(இந்த முகவரிக்கு அனுமதி அட்டை தபால் செய்யப்படும்)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

(இ) நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.

(ஈ) பிரதேச செயலகப் பிரிவு :----.

(உ) உமது தொலைபேசி இலக்கம் :
நிலையான :----.
கையடக்க :----.

5. (அ) பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

(ஆ) 2016.12.14 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

6. திருமணமானவரா / திருமணமாகாதவரா ?
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2 ☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தை குறிப்பிடுக)

7. தேசிய இனம் :
சிங்களவர் - 1, தமிழர் - 2, ஏனையவர்கள் - 3 ☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தை குறிப்பிடுக)

8. கல்வித் தகைமைகள் :

(அ) க.பொ.த. (சா.த) பரீட்சை :

முதலாம் தடவை :
ஆண்டு :----.
பரீட்சை இலக்கம் :----.

| தொடர் இலக்கம் | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

இரண்டாம் தடவை :
ஆண்டு :----.
பரீட்சை இலக்கம் :----.

| தொடர் இலக்கம் | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(ஆ) க.பொ. த. (உயர் தரம்) பரீட்சை :
ஆண்டு :----.
பரீட்சை இலக்கம் :----.

| தொடர் இலக்கம் | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

9. தொழிற் தகைமை/ தொழிநுட்ப ரீதியான தகைமை

9.1 பெற்றுள்ள பட்டம்/ டிப்ளோமா :----.
9.2 குறித்த பட்டம்/ டிப்ளோமாவை வழங்கிய நிறுவனத்தின் பெயர் :----.
9.3 குறித்த பட்டம்/ டிப்ளோமா செல்லுபடியாகும் காலப்பகுதி :----.

10. ஏனைய தகைமைகள் :----.

11. நீர் யாதேனும் தவறுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு அல்லது தற்போது உமக்கு எதிராக ஏதேனும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா ? ஆம்/ இல்லை :----.

11.1 ஆமெனில், விபரங்களைக் குறிப்பிடுக :----.

12. விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தொழில் புரிபவரெனில், பதவிப் பெயர் சேவையாற்றும் திணைக்களத்தின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிடுக :----.

13. விண்ணப்பதாரர் இதற்கு முன்னர் அரசாங்க / மாகாண அரசாங்க சேவையிலிருந்து விலகியவராயின், இதற்கான காரணம் :----.

14. பரீட்சை கட்டணம் செலுத்துதல் பற்றிய விபரம் :

14.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/ உபதபால் அலுவலகம் :----.
14.2 பற்றுச்சீட்டு இலக்கம் :----.
14.3 பணம் செலுத்தப்பட்ட திகதி :----.

| |
|---|
| பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு ஒட்டவும்.<br>பற்றுச்சீட்டின் பிரதியை தம்வசம் வைத்திருக்கவும். |

15. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் அனைத்து தகைமைகளையும் 2016.12.14 ஆந் திகதிக்கு பூர்த்தி செய்துள்ளதாகவும் அறிவிக்கின்றேன்.

(ஆ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மைக்குப் புறம்பானவை என தெரியவரும் பட்சத்தில், இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும், நியமனம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

(இ) 750 ரூபா செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

(ஈ) மேலும், பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் என்பதையும் தெரிவிக்கின்றேன்.

(உ) மேற்குறிப்பிடப்பட்ட எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் .............. என்பவரை நான் தனிப்பட்ட விதத்தில் அறிவேன் என்பதையும், அவர் ........... ஆந் திகதி என் முன்னிலையில் மேலே பிரிவு 15 இன் கீழ் தனது கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி, அதற்குரிய பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை) :----.
திகதி :----.

17. திணைக்களத் தலைவரின் சான்றுரை : (அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

17.1 மேற்குறிப்பிடப்பட்ட திரு./ திருமதி/ செல்வி என்பவர் ................................................. அலுவலகத்தில் பணியாற்றுவதாகவும், அவர் ..................................... ஆந் திகதி முதல் .................................................... பதவியில் பணியாற்றுவதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

17.2 உத்தியோகத்தரின் பிரத்தியேக ஆவணக்கோவையின் பிரகாரம், விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு கிட்டிய ஐந்து வருட காலப்பகுதிக்குள் அவரது வேலை, நடத்தை, வருகை திருப்திகரமானது/ அதிருப்தியானது. அவர் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார்/ பெறவில்லை. எந்தவிதமான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படவில்லை/ உட்பட்டுள்ளார். (ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டுள்ளாரெனில், விபரங்களைக் குறிப்பிடுக.) :----.

17.3 அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் குறிப்பிட்ட உத்தியோகத்தரை தற்போதைய சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.
உத்தியோகபூர்வ முத்திரை :

திகதி :----.

11-504

---

**அரச கரும மொழிகள் திணைக்களம்**

*அரச கரும மொழிகள் திணைக்களத்தின் II ஆம் தர மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016*

அரச கரும மொழிகள் திணைக்களத்தில் பின்வரும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) - 08 பதவிகள்
மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) - 02 பதவிகள்
மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) - 10 பதவிகள்

2. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 36,585-10 X 660-11 X 755-15 X 930- ரூபா 65,440.

3. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

4. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை :**

| பிரிவு | வீதம் |
|---|---|
| திறந்த | 75% |
| மட்டுப்படுத்தப்பட்ட | 25% |
| திறன்கள் | ஏற்புடையதன்று |

**குறிப்பு**.- திறந்த பிரிவின்கீழ் ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தகைமையுடைய போதியளவிலான விண்ணப்பதாரிகள் காணப்படாவிடில், அவ்வெற்றிட எண்ணிக்கையானது மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின்கீழ் நிரப்பப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின்கீழ் தகைமையுடைய போதியளவிலான விண்ணப்பதாரிகள் காணப்படாவிடில், அவ்வெற்றிட எண்ணிக்கையானது திறந்த பிரிவின்கீழ் நிரப்பப்படும்.

5. **தகைமைகள்**.- II ஆம் தர மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்கு (மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த) பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும் :-

5.1 ***மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) :***

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிங்கள மொழியையோ அல்லது ஆங்கில மொழியையோ ஒரு பாடமாக சித்தியடைந்து பெறப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

மற்றும்

(i) பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி/ ஆங்கில இலக்கியத்திற்குத் திறமைச் சித்தியைக் கொண்டிருத்தல் அல்லது பட்டத்திற்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டத்திற்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்கள மொழியில் ஆகக் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல்

அல்லது

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மொழிபெயர்ப்பு முறைகளை ஒரு பாடமாகச் சித்தியடைந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

மற்றும்

(i) க. பொத. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் சிங்கள மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு ஆகக்குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்கள மொழியில் ஆகக்குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

அல்லது

(3) இலங்கை கீழைத்தேய மொழி ஊக்குவிப்பு சங்கத்தில் இறுதி (பண்டிதர்) பட்டம் பெற்றிருத்தல்

மற்றும்

(i) க. பொத. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு ஆகக்குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

***மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) :***

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ் மொழியையோ அல்லது ஆங்கில மொழியையோ ஒரு பாடமாக சித்தியடைந்து பெறப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

மற்றும்

(i) பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி/ ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைக் கொண்டிருத்தல் அல்லது பட்டத்திற்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டத்திற்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் ஆகக்குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல்

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மொழிபெயர்ப்பு முறைகளை ஒரு பாடமாகச் சித்தியடைந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

மற்றும்

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் ஆகக்குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

***மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) :***

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ் மொழி அல்லது சிங்கள மொழியை ஒரு பாடமாக சித்தியடைந்து பெறப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

மற்றும்

(i) பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க.பொ.த.(உ.த.) பரீட்சையில் சிங்கள மொழியில் ஆகக்குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் ஆகக்குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல்

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மொழிபெயர்ப்பு முறைகளை ஒரு பாடமாகச் சித்தியடைந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

மற்றும்

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் அத்துடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்கள மொழியில் ஆகக் குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் ஆகக் குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

(3) இலங்கை கீழைத்தேய மொழி ஊக்குவிப்புச் சங்கத்தில் இறுதி (பண்டிதர்) பட்டம் பெற்றிருத்தல்

மற்றும்

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல்

5.2 ***உடல்சார் தகைமைகள்.-*** சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவிக்குரிய பணிகளை ஆற்றுவதற்குமுரிய போதிய உடல் மற்றும் உளத் தகுதியுடையவராய் இருத்தல் வேண்டும்.

5.3 ***ஏனையவை :***

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) விண்ணப்பதாரிகள் சிறந்த நல்லொழுக்கத்தை உடையவராய் இருத்தல் வேண்டும் ;

(3) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பப்படிவம் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதிக்கு சகல வழிகளிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

5.4 தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் பதவிகள் நிரந்தரமானவையாக இருத்தல் வேண்டும்.

6. **சேவை நிபந்தனைகள்.-** (i) நியமிக்கப்படும் எண்ணிக்கையும் பதவி நடைமுறைப்படுத்தும் திகதியும் அரச கரும மொழிகள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையையோ சகல வெற்றிடங்களையோ நிரப்பும் அதிகாரம் அரச கரும மொழிகள் ஆணையாளருக்கே உண்டு.

(ii) பதவிக்கு நியமனம் பெற்று 3 வருடங்கள் கடப்பதற்கு முன் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) நியமனம் பெற்று 5 வருடங்கள் கடப்பதற்கு முன் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/ 2014 இன் பிரகாரம் மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் அரச சேவைகள் ஆணைக்குழுவின் 1586/30 ஆம் இலக்க மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் அமைய பதவியின் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

(v) அனைத்து ஆட்சேர்ப்புகளும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கும் எதிர்காலத்தில் அவ்வாட்சேர்ப்பு நடைமுறைக்கு செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்படல் வேண்டும்.

(vi) அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள/ நிறுவனத் தலைவரின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. **வயதெல்லை.-** ***திறந்த :*** விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 21 வயதிற்கு குறையாமல் இருப்பதோடு 35 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். ***மட்டுப்படுத்தப்பட்ட :*** ஏற்புடையதன்று.

8. ***ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.-*** எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு பொதுவான ஒரு நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

8.1 ***பரீட்சைக்குரிய பாடங்கள் :***

| | *வினாப்பத்திரம்* | *காலம்* | *மொத்த புள்ளிகள்* | *சித்தியடைய தேவையான புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு- சிங்கள மொழி யிலிருந்து ஆங்கில மொழிக்கு | 3 மணித்தியாலம் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு- ஆங்கில மொழி யிலிருந்து சிங்கள மொழிக்கு | 3 மணித்தியாலம் | 100 | 40% |
| | 3. சிங்கள மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| | 4. ஆங்கில மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/ தமிழ்) | 1. மொழிபெயர்ப்பு- தமிழ் மொழி யிலிருந்து ஆங்கில மொழிக்கு | 3 மணித்தியாலம் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு- ஆங்கில மொழி யிலிருந்து தமிழ் மொழிக்கு | 3 மணித்தியாலம் | 100 | 40% |
| | 3. தமிழ் மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| | 4. ஆங்கில மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) | 1. மொழிபெயர்ப்பு- சிங்கள மொழி யிலிருந்து தமிழ் மொழிக்கு | 3 மணித்தியாலம் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு- தமிழ் மொழி யிலிருந்து சிங்கள மொழிக்கு | 3 மணித்தியாலம் | 100 | 40% |
| | 3. சிங்கள மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| | 4. தமிழ் மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |

8.2 பாடவிதானம் :

| | வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|---|
| மொழி பெயர்ப் பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு.- சிங்கள மொழி யிலிருந்து ஆங்கில மொழிக்கு | * நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 2. மொழிபெயர்ப்பு.- ஆங்கில மொழியி லிருந்து சிங்கள மொழிக்கு | * நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 3. சிங்கள மொழி | * கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கமாகத் தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்துதல், பேச்சு வழக்கு களை விளக்குதல், எழுத்துக்கூட்டல் |
| | 4. ஆங்கில மொழி | * கட்டுரை எழுதுதல், தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு அவற்றின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், பேச்சு வழக்குகளை விளக்குதல், கூட்டு மற்றும் சிக்கலான வாக்கியங்களை விளக்குதல் |
| மொழி பெயர்ப் பாளர் (தமிழ்/ ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு.- தமிழ் மொழியிலி ருந்து ஆங்கில மொழிக்கு | * நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 2. மொழிபெயர்ப்பு.- ஆங்கில மொழியி லிருந்து தமிழ் மொழிக்கு | * நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பந்திகளை ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 3. தமிழ் மொழி | * கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றைச் சுருக்கமாகத் தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக் கூட்டல் |
| | 4. ஆங்கில மொழி | * கட்டுரை எழுதுதல், தரப்பட்ட சொற்களைக் கொண்டு அவற்றின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், பேச்சு வழக்குகளை விளக்குதல், கூட்டு மற்றும் சிக்கலான வாக்கியங்களை விளக்குதல் |
| மொழி பெயர்ப் பாளர் (சிங்களம்/ தமிழ்) | 1. மொழிபெயர்ப்பு.- தமிழ் மொழியிலி ருந்து சிங்கள மொழிக்கு | * நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட (3) மூன்று பந்திகளை தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல் |
| | 2. மொழிபெயர்ப்பு.- சிங்கள மொழியி லிருந்து தமிழ் மொழிக்கு | * நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட (3) மூன்று பந்திகளை சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல் |

| | *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாட விதானம்* |
|---|---|---|
| | *3. சிங்கள மொழி* | * *கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றைச் சுருக்கமாகத் தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக் கூட்டல்* |
| | *4. தமிழ் மொழி* | * *கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றைச் சுருக்கமாகத் தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக் கூட்டல்* |

*9.* ***போலியான தகவல்களுக்கான தண்டனை.-*** *விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்யும்போது கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சை சட்டதிட்டங்களுக்கமைய விண்ணப்பதாரி ஒருவர் பொருத்தமற்றவர் என்பது தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச்செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது பொய்யானது எனத் தெரியவந்தால் அவரை அரச சேவையிலிருந்தே நீக்க முடியும். அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அரச கரும மொழிகள் ஆணையாளரால் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்ற அங்கீகாரமாகக் கருதலாகாது. பரீட்சை நடாத்துவது தொடர்பாக அரசகரும மொழிகள் ஆணையாளரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுபவர்கள் அரச கரும மொழிகள் ஆணையாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*10. இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பதங்களுக்கிடையில் ஏதாவது உடன்பாடோ அல்லது வேறுபாடோ ஏற்பட்டால் அப்போது சிங்கள மொழிப் பதங்களே மேலோங்கி இருத்தல் வேண்டும்.*

*11.* ***பரீட்சைக் கட்டணம்.-*** *பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். இத்தொகை திறைசேரி செயற்பாட்டு பணிப்பாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-99-00 இன்கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் அல்லது மாவட்ட செயலகத்திலும் செலுத்த முடியும். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு பற்றுச்சீட்டை ஒட்டுதல் வேண்டும். (அதன் பிரதியை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது.*

*12. விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்யும்போது கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சை சட்டதிட்டங்களுக்கமைய விண்ணப்பதாரி ஒருவர் பொருத்தமற்றவர் என்பது தெரியவந்தால் நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் அல்லது நேர்முகப் பரீட்சை நடைபெறும்போது அல்லது பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சைத் தகைமையை இரத்துச்செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது பொய்யானது எனத் தெரியவந்தால் அவரை அரச சேவையில் இருந்து நீக்க முடியும்.*

*13. விண்ணப்பப்படிவத்தை ஏ4 (24x29cm) அளவிலான தாளைப் பயன்படுத்தி,*

*(அ) தொடர் இலக்கம் 1 முதல் 3.4 வரையான பந்திகள் முதல் பக்கத்திலும்*

*(ஆ) தொடர் இலக்கம் நான்கிலிருந்து அடுத்த பக்கங்களில் உள்ளடக்கப்படுமாறு விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.*

*(இ) விண்ணப்பப்படிவம் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பெயர் சிங்கள மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும். குறித்த தகவல்களை தமது கையெழுத்திலேயே தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.*

*13.1 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (சிங்களம்/தமிழ்) மற்றும் (தமிழ்/ஆங்கிலம்) பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2016" எனக் குறிப்பிடவும்.*

13.2 சரியான முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2016.12.14 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

அரச கரும மொழிகள் ஆணையாளர்,
அரச கரும மொழிகள் திணைக்களம்,
இல. 341/7, "பாஷா மந்திரய",
கோட்டே வீதி,
இராஜகிரிய.

13.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரினால், சமாதான நீதவானால், சத்தியப்பிரமாணம் செய்த ஆணையாளரினால், பிரசித்த நொத்தாரிசால், முப்படையில் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால், வருடாந்த சம்பளம் 2,92,080 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரச பதவியிலுள்ள உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

13.4 தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை உரிய திணைக்கள/ நிறுவனத் தலைவர் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

14. விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

15. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் அரச கரும மொழிகள் ஆணையாளரே தீர்மானிப்பார். விண்ணப்பதாரர்கள் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட பொது சட்டதிட்டங்களின் பிரகாரம் செயலாற்றுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி டபிள்யூ. ஏ. ஜயவிக்ரம,
அரச கரும மொழிகள் ஆணையாளர்.

அரச கரும மொழிகள் திணைக்களம்,
இல. 341/7, "பாஷா மந்திரய",
கோட்டை வீதி,
இராஜகிரிய.
2016, ஒற்றோபர் 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

Application for the Post of Translator (Sinhala/English), (Tamil/English) & (Sinhala/Tamil)

[ ]
(அலுவலக பயன்பாட்டுக்காக)

விண்ணப்பிக்கும் பதவி :

1. மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்)
2. மொழி பெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்)
3. மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)

[ ]
(உரிய இலக்கத்தைக் குறிப்பிடுக.)

1. பெயர் :----.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் Mr./Mrs/Miss (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

2. முகவரி :

2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.4 அனுமதிப்பத்திரங்களை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
----.

2.5 தொலைபேசி இலக்கம் :----.

2.6 விண்ணப்பதாரி நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.

2.7 வசிக்கும் கால எல்லை :----.

2.8 கிராம அலுவலர் பிரிவு :----.

3. 3.1 பால் :

(பெண்-1, ஆண்-0) ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 விவாகமானவர்/விவாகமாகாதவர் :
விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.3 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.4 2016.11.11 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. கல்வித் தகைமைகள் :

4.1 (அ) பட்டம் :
(ஆ) பட்டம் பெற்றுக்கொண்ட வருடம் மற்றும் பல்கலைக்கழகம் :
(இ) பட்டம் தொடர்ந்துள்ள பாடங்கள் :

4.2 க. பொ. த. (உ. த.) :

(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

4.3 க. பொ. த. (சா. த.) :

(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடங்கள் | சித்தி | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

5. நீர் எப்போதேனும் அல்லது ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? :
(உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக) :

ஆம் : ☐ இல்லை : ☐

ஆம் எனில் அது தொடர்பான விபரங்கள் :................................

6. பரீட்சைக் கட்டணம் :

(i) பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :----.
(iii) செலுத்திய தொகை :

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும். (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்.) |

7. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானது எனவும், இந்த ஆட்சேர்ப்புச் செய்யும் பரீட்சையின் நிபந்தனைகளின்படி நான் தகைமையற்றவர் எனத் தெரியவரும் சந்தர்ப்பத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தும்பொழுது அல்லது அதற்குப் பின்னர் எனது பரீட்சைத் தன்மையை இரத்துச்செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும் நான் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்துள்ள ............................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

(தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக)

***திணைக்களத் தலைவரின் உறுதியுரை :***

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ...................................................... என்பவர் ....... ................................................ ஆந் திகதியிலிருந்து இவ் அலுவலகத்தில் பணியாற்றுகின்றார் எனவும் அவரின் வேலை மற்றும் நடத்தை எப்போதும் திருப்திகரமானது எனவும் மேற்குறிப்பிட்டுள்ள சகல தகவல்களையும் இவ் அலுவலகத்திலுள்ள அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நான் தனிப்பட்ட முறையில் பரிசீலித்தேன் எனவும் அவை சரியானவை எனவும் 2016, .......................... ஆம் மாதம் .......................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

*11-558*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.